Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 தை 13 செவ்வாய்க்கிழமை (27.01.2015) பக்கங்கள் 20 ஓசை – 119

## தேர்தலில் போட்டியிடப் போவதில்லை முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு

தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக போட்டியிடும் தனது மகன் நாமல் ராஜபக்ஷவுக்காக பிரசாரத்தில் ஈடுபடப் போவதாக தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தனக்கு புதிய கட்சி ஆரம்பிக்கும் எண்ணம் அல்லது புதிய கூட்டணிகளை உருவாக்கும் எண்ணமோ இல்லையென தெரிவித்துள்ளதாக ஐ.ம.சு.மு தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் சபாநாயகர் இல்லத்தில் இடம்பெற்ற ஐ.ம.சு.மு கூட்டத்தில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசியல் கைதிகள் விடுதலை நூறு நாள் திட்டத்தில் சாத்தியமில்லை

ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் நூறு நாள் வேலைத்திட்டத்தில் அரசியல் கைதிகளின் விடுதலை முழுமையாக சாத்தியமாகாது என்றும் எனினும் வருட இறுதிக்குள் அநேகமான அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்புடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இவ்வருட இறுதிக்குள் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மன்னார் ஆயர்

19 ஆம் பக்கம் பார்க்க

# பிரதிப் பிரதமர் பதவி தேர்தலின் பின்னர் முடிவு

### ஊடக அமைச்சர் தகவல்



(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் பிரதமர் பதவிக்கு மேலதிகமாக பிரதிப் பிரதமர் பதவியும் உருவாக்கப்படவுள்ளது.

நூறு நாள் வேலைத் திட்டத்தின் பின்னர் பிரதமர் மற்றும் பிரதிப் பிரதமர் ஆகியோருடன் புதிய அரசியல் சகாப்தமொன்று உருவாக்கப்படும் என ஊடகத் துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும் கட்சிக்கு பிரதமர் பதவியையும், இரண்டாவது அதிக ஆசனங்களைப் பெறும் கட்சிக்கு பிரதிப் பிரதமர் பதவியும் வழங்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கமைய உருவாக்கப்படும் அரசாங்கத்தை தேசிய அரசாங்கம் எனக் குறிப்பிட முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கயந்த கருணாதிலக்க கண்டி அஸ்கிரிய மாநாயக்க தேரரை கடந்த சனிக்கிழமை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

## மன்னாரில் அமைதி ஊர்வலம்

(மன்னார்)

தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவந்து, புதிய அரசாங்கம் தீர்வொன்றை பெற்றுத்தரவேண்டும் என்று வலியுறுத்தி, அமைதி ஊர்வலம் ஒன்று நேற்று மன்னாரில் நடைபெற்றது.

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டம், மன்னார்

19 ஆம் பக்கம் பார்க்க

## திருக்கேதீஸ்வரம் புதைகுழி வழக்கு; விரிவான அறிக்கை கோருகிறது நீதிமன்றம்

(மன்னார்)

மன்னார், திருக்கேதீஸ்வரம் புதைகுழி வழக்கு நேற்று மன்னார் நீதிமன்றில் மன்னார் மாவட்ட நீதிபதி ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதிக்கு இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படும் என்று அறிவித்தார்.

இந்த வழக்கு விசாரணைகள் குறித்து, ஊடகவியலாளருக்கு கருத்து தெரிவித்த சட்டத்தரணி நிறைஞ்சன், சில அறிக்கைகளை நீதிமன்றம் எதிர்பார்த்திருந்தது. ஒன்று வைத்திய அதிகாரி வைத்திய ரட்ணவின் அறிக்கை, மற்றையது பேராதனை பல்கலைக் கழகத்தின் பகுப்பாய்வு அறிக்கை. ஆனால் இவற்றைப் பெறுவதற்கான அழைப்பாணைகள் பெறப்படாததால் அறிக்கைகள் மன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை.

வன்னி பிரதிப் பொலிஸ்மா

19 ஆம் பக்கம் பார்க்க

## பிராந்திய அரசியலிலும் அவசியம் மாற்றம் வேண்டும்

### ஊடக அறிக்கையில் ஈ.பி.டி.பி. தெரிவிப்பு

தமிழர் பிரச்சினையைத் தீர்க்க புதிய அரசாங்கத்துக்கு கால அவகாசம் வழங்கியிருப்பதாக தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கூறியிருப்பது தமது நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை மூடி மறைக்கும் தந்திரோபாயப் பொய்களே அன்றி வேறொன்றும் அல்ல. மக்களுக்கு பொய் கூறும் இவ்வாறான செயற்பாடுகளையே ஈ.பி.டி.பி. கண்டிக்கின்றது.

ஏற்கனவே 2014 செப்ரெம்பர் மாதம் வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் 15 ஆவது மகாநாட்டில் உரையாற்றிய மாவை சேனாதிராசா, தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கப்படாவிட்டால் 2015 ஆம் ஆண்டு தைத்திங்கள் முதலாம் நாள் அகிம்சைப்போர் வெடிக்கும் என்று கூறியிருந்தார். ஆனால் தைத்திங்களில் அவர் கூறிய அகிம்சைப்போர் வெடிக்கவில்லை.

அவ்வாறானதொரு அகிம்சைப்போரை உறுதியோடு முன்னெடுக்கக்கூடிய ஆளுமை கூட்டமைப்புக்கோ, தமிழரசுக் கட்சிக்கோ இல்லை என்று அரசியல் விமர்சகர்கள் கூறியிருந்தனர்.

இப்போது ஒரு அறப்போரைப் பற்றி அவரே மீண்டும் கூறியிருக்கின்றார். அது எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதைப் பற்றியும் புத்திசாதுரியமாக தெரிவிக்காமலும் மழுப்பியிருக்கின்றார்.

நாம் ஏற்கனவே கூறியது போல் அடுத்து நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களிடம் கூறுவதற்கு புதிய சாக்குப் போக்குகளை தேடிய கூட்டமைப்பினருக்கு எதுவும் கிடைக்கவில்லை.

இறுதியில் தற்போதைய

19 ஆம் பக்கம் பார்க்க

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருடன் அமெரிக்க அதிகாரி சந்திப்பு



(கொழும்பு)

அமெரிக்கத் தூதரக அதிகாரி பாதுகாப்பு அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரி அன்ட்டு மான், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தனவை சந்தித்துள்ளார்.

இரு தரப்பு பாதுகாப்பு உறவுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பின் போது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## மணல் விநியோகம் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நாகர்கோவில் வடக்கு சமூகமட்ட அமைப்புக்களின் பூரண ஒத்துழைப்புடன் மணல் வழங்கும் சேவை நேற்று மீண்டும் ஆரம்பமானது.

குடாநாட்டின் கட்டுமானங்களுக்கான மணல் விநியோகம் வழமைபோன்று தடையின்றி இனி தொடர்ந்து இடம்பெறும் என மகேஸ்வரி நிதியத்தின் இணைப்பாளர் தம்பித்துரை ரஜீவ் தெரிவித்துள்ளார்.

## இலங்கை – இந்திய உறவை வலுவாக்க புதிய செயற்றிட்டம்

### இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையிலான புதிய செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சின்ஹா தெரிவித்தார்.

இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் நெருக்கமாக. இணைந்து செயற்பட இந்தியா எதிர்பார்ப்பதாகவும் இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சின்ஹா மேலும் தெரிவித்துள்ளார்.

இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர், இந்திய இல்லத்தில் வைத்து இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இரண்டு நாடுகளினதும் மக்கள் பயன்பெறும் வகையில் இரண்டு நாடுகளுக்கும் இடையிலும் உறவுகள் பலப்படுத்தப்பட வேண்டும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பூகோள ரீதியில் மாத்திரம் அல்லாமல், கலாசார ரீதியாகவும் குடும்ப ரீதியாகவும்

19 ஆம் பக்கம் பார்க்க

# விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

இவ்விபத்துச் சம்பவத்தில் இலுப்பைக் கடவையைச் சேர்ந்த் பி.சுகந்தன் (வயது-30) என்பவரே கால் முறிவடைந்த நிலையில் யாழ். போதனாவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்துச் சம்பளம் கடந்த சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# தொழிற்கற்கை நெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணத்தில் கடற்றொழில் மற்றும் கட்லோட்டு எந்திரவியல் கல்லூரியானது தொழிற்கற்கை நெறிகளுக்கு விண்ணபங்களைக் கோரியுள்ளது.

க.பொ.த. சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர்தரம் சித்தியடைந்வர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். மீன்பிடி தொழில் நுட்பம், கடலக வரைபடம், வாசித்தலும் செய்மதி தொடர்பாடலும் (GPS), வெளி இணைப்பு இயந்திர பொறிவலர், கடலக ஓட்டுநர் பயிற்சி நெறி, உயர்பாதுகாப்பு பயிற்சி நெறி, சுழியோடிப் பயிற்சிநெறி, கடலக மாலுமி பயிற்சிநெறி உயர் பாதுகாப்பு பயிற்சி நெறி, சுழியோடிப் பயிற்சி நெறி, கடலக மாலுமி பயிற்சிநெறி, கரையோர வளங் களின் முகாமைத்துவம், மீன் வளர்ப்பு மற்றும் மீன்பிடி முகாமைத்துவம், படகு உற்பத்தி செய்தலும், திருத்துதலும், கடல் .இயந்திரவியல் தொழில்நுட்பம் ஆகிய கற்கை நெறிகள் இடம்பெறவுள்ளன.

இக் கற்கைநெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரங்களை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். உரிய விண்ணப்பங்களைப் பெறவிரும்புபவர்கள் அலுவலக நாட்களில் நேரடியாகத் தொடர்புக்கொள்ள முடியும். தொடர்புகளுக்கு 021-222 6351 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# குருநகர் மத்தியூஸ் வீதியை புனரமைக்க நடவடிக்கை

குருநகர் மத்தியூஸ் வீதி ஒழுங்கை மூன்றரை இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமுமான முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்தே இவ் ஒழுங்கை வீதி புனரமைக்கப்படவுள்ளதாக யாழ்.மாநகரசபையின் முன்னாள் துணை முதல்வர் து.இளங்கோ (றீகன்) தெரிவித்துள்ளார்.

மேலும் அவரது கண்காணிப்பின் கீழ் இவ்வீதி புனரமைப்பு வேலைகள் நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (பா)

# DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | செவ்வாய்க்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப்பாடல்கள்) |
| Am 07.00 | காலைக்கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time (Live) |
| Am 09.58 | காலை செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | தெரிந்தால் சொல்லுங்கள் |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | அதிர்வுகள் |
| PM 12.30 | அதிர்வுகள் |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# பாதுகாப்பற்ற நிலையில் இராமநாதன் வீதி புகையிரதக் கடவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இராமநாதன் வீதியிலுள்ள புகையிரதக் கடவை பாதுகாப்பாற்ற நிலையில் காணப்படுவதால் ஆபத்து மிகுந்ததாகக் காணப்படுகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆனந்தகுமாரசாமி பெண்கள் விடுதிக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியை ஊடறுத்துச் செல்லும், புகையிரதப் பாதையில் வீதிக்கடவை இல்லை. அத்துடன் புகையிரதம் வரும் வேளையில் ஒலி எழுப்பும் கம்பமும் அவ்விடத்தில் பொருத்தப் படவில்லை. யாழ். பல்கலைக் கழகத்துக்குச் செல்லும் மாணவர்கள் அதிகளவில் பயன்படுத்தும் வீதியாக இருப்பதால், நாள்தோறும் பெருமளவானவர்கள் இவ்வீதியினைப் பயன்படுத்துவதனால் இங்கு பாதுகாப்பான புகையிரதக் கடவை அமைக்கப்படவேண்டும் என்பது பலரது கோரிக்கையாகவுள்ளது.

# விசேட பொதுக் கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க (லிப்கோ) விசேட பொதுக் கூட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி லிப்கோ மண்டபத்தில் அதன் தலைவர் மு.பரமேஸ்வரன் தலைமையில் இப்பொதுக் கூட்டம் இடம்பெறுகின்றது.

இதில் பால் உற்பத்தி தொழிற்சாலையின் எதிர்காலத் திட்டம் குறித்து ஆராயப்படவுள்ளதால் சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது உரிய நேரத்துக்குச் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# அமெரிக்க சுவாமிகள் யாழ்ப்பாணம் வருகை



(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவிலுள்ள சர்வதேச பெருமைமிக்க ஹவாய் ஆதின முதல்வர் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் ஆன்மீக யாத்திரையாக யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

அவரை அடியார்கள் தரிசித்து ஆசி பெறுவதற்கு சிவபூமி அறக்கட்டளை ஏற்பாடு செய்துள்ளது. இதன்படி எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கோண்டாவில் சிவபூமி ம்ண்டபத்தில் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் தலைமையில் சிறப்பு தரிசனம் இடம்பெறவுள்ளது.

எனவே இவ்வரிய தெய்வீக நிகழ்ச்சியில அனைவரும் கலந்துகொண்டு சுவாமிகளின் நல்லாசியைப் பெற்றுக்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# அதிபர்கள் செயலமர்வு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கு நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவிருந்த செயலமர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

# கூட்டம்

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வேலணை பிரதேச செயலக சங்கத்தினது ஆலோசனைக் கூட்டமானது இன்று காலை 10.30 மணியளவில் வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் செ. சிவலோக நாதன் தெரிவித்துள்ளார். (05)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
வெளிவாரிப்பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

## வெளிவாரிப் பரீட்சைகள் - 2013

1. வணிக முதற் தேர்வு - 2012 (புதிய பாடத்திட்டம்)
2. வணிக முதற் தேர்வு - 2012 (பழைய பாடத்திட்டம்)
3. வணிக இரண்டாம் தேர்வு - 2012 (புதிய பாடத்திட்டம்)
4. வணிக மாணி - பகுதி - I - 2012 (பழைய பாடத்திட்டம்)
5. வணிக மூன்றாம் தேர்வு - 2012 (புதிய பாடத்திட்டம்)
6. வணிக மாணி - பகுதி - II - 2012 (பழைய பாடத்திட்டம்)
7. வணிக நான்காம் தேர்வு - 2012 (புதிய பாட்த்திட்டம்)
8. வணிக மாணி - பகுதி - III - 2012 (பழைய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகள் 23.02.2015 (திங்கட்கிழமை) தொடக்கம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பின்வரும் ஒழுங்கில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. வணிக முதற் தேர்வு - 2012 (புதிய பாடத்திட்டம்) | 23.02.2015 - 03.03.2015 | 9.00 - 12.00 |
| 2. வணிக முதற் தேர்வு - 2012 (பழைய பாடத்திட்டம்) | 23.02.2015 - 03.03.2015 | 9.00 - 12.00 |
| 3. வணிக இரண்டாம் தேர்வு - 2012 (புதிய பாடத்திட்டம்) | 06.03.2015 - 14.03.2015 | 9.00 - 12.00 |
| 4. வணிக மாணி - பகுதி - I - 2012 (பழைய பாடத்திட்டம்) | 06.03.2015 - 14.03.2015 | 9.00 - 12.00 |
| 5. வணிக மூன்றாம் தேர்வு - 2012 (புதிய பாடத்திட்டம்) | 16.03.2015 - 21.03.2015 | 9.00 - 12.00 |
| 6. வணிக மாணி - பகுதி - II - 2012 (பழைய பாடத்திட்டம்) | 16.03.2015 - 21.03.2015 | 9.00 - 12.00 |
| 7. வணிக நான்காம் தேர்வு - 2012 (புதிய பாடத்திட்டம்) | 23.03.2015 - 28.03.2015 | 9.00 - 12.00 |
| 8. வணிக மாணி - பகுதி - III - 2012 (பழைய பாடத்திட்டம்) | 23.03.2015 - 28.03.2015 | 9.00 - 12.00 |

பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும்18.02.2015 (புதன்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
26.01.2015

(C/3806)

# இந்திய துணைத்தூதரகத்தில்

# குடியரசு தின கொண்டாட்டம்



(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் 66 ஆவது குடியரசு தினம் நேற்று யாழ். இந்திய துணைத்தூதரகத்தில் கொண்டாடப்பட்டது.

காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ஏ.நடராஜன் இந்திய தேசியக் கொடியினை ஏற்றி வைத்ததுடன் இந்திய தேசிய கீதம் இசைக்கப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது.

குடியரசு தினத்தை முன்னிட்டு இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியினால் ஆற்றப்பட்ட உரை இதன்போது துணைத் தூதுவரினால் ஆங்கிலத்திலும், ஹிந்தியிலும் வாசிக்கப்பட்டது.

இக்குடியரசு தின நிகழ்வில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய நிறுவனங்களான "இல்கோன்", இந்தியன் வங்கி, ஸ்ரேட் வங்கி போன்றவற்றில் கடமையாற்றும் ஊழியர்கள், அதிகாரிகள் மற்றும் தொழில் நிமித்தம் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள இந்தியப் பிரஜைகள் என பெருமளவானோர் கலந்து கொண்டிருந்ததுடன் குடியரசுதின விருந்துபசாரமும் இதன்போது இடம்பெற்றது. (இ,25)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் தையல் கண்காட்சியும்




(கிளிநொச்சி)

கிளிநொச்சியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் நாறோ - NAHRO மனிதாபிமான புனர்வாழ்வு செயற்பாடு களுக்கான தேசிய சங்கத்தின் சான்றிதழ் வழங்கும் நிக்ழ்வும் தையல் கண்காட்சியும் கடந்த சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன் மற்றும் சிறப்பு அதிதியாக மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செந்தாமரை உதவும் கரங்கள் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் தையல் பயிற்சி நடாத்தப்பட்டு பயிற்சியினை நிறைவு செய்த கரைச்சி பிரதேச செயலக பிரிவிலுள்ள கோணாவில் ராஜன்குடியிருப்பைச் சேர்ந்த பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பயிற்சியாளர்களால் தைக்கப்பட்ட ஆடைகள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. 'நாறோ' நிறுவனம் பலவித புனர்வாழ்வு பணிகளை வடமாகாணத்தில் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (90)

# மணற்காடு முத்துமாரி அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம்



(யாழ்ப்பாணம்)

காரைநகர் திருவருள்மிகு மணற்காடு கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பெருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.36 மணி முதல் 10.45 மணி வரை பூரண சுபமுகூர்த்தத்தில் ஸ்தூபிகள், புதிய இராஜகோபுரம், மணிமண்டபம் அகில லோகநாயகி அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நடைபெறவுள்ளது.

இதன் முன்னதாக யாகாரம்பம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகும். மறுநாள் சனிக்கிழமை காலை 8 மணி முதல் 01 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி வரை அடியார்கள் எண்ணைக்காப்பு சாத்துதல் நடைபெறவுள்ளது. (50)

# முல்லைத்தீவு பஸ் நிலையம் விரைவில் புனரமைக்கப்படும்

## தனியார் பேருந்து சங்கத்தலைவர் தெரிவிப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பஸ் நிலையத்தை புனரமைப்பதற்கான நடவடிக் கைகளை விரைவில் மேற்கொள்ளவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்துச்சங்கத் தலைவர் ச.கனகரட்னம் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

மழை காலங்களில் முல்லைத்தீவு பஸ் நிலையம் சேறும் சகதி யும் நிறைந்த இடமாக மாறிவிடும். அத்துடன், பஸ் நிலையத்தில் போதிய வசதிகள் இல்லாமையால் வேறு இடங்களில் இருந்து அங்கு வருகை தரும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பில் தனியார் பஸ் சங்கத் தலைவர் விளக்கமளிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு என இருக்கும் இந்த பஸ் நிலை யத்தில் அரச, தனியார் பஸ்கள் தரித்து நின்று பயணிக்கின்றன. பஸ் நிலையம் அமைப்பதற்கான காணி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தால் அண்மையில் வழங்கப்பட்டது. இதனடிப்படையில் எதிர்காலத்தில் பஸ் நிலையத்தை சகல வசதிகளும் கொண்ட மற்றும் மழை காலங்களில் பயணிகளுக்கு அசௌகரியங்களை உண்டாக்காத வகையில் அமைக்கப்படவுள்ளதாகக் கூறினார். (160)

# மண் பிரச்சினையும் மாவட்டத்தின் அபிவிருத்தியும்

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் மணல் அகழும் நடவழக்கை ஒழுங்கமைக்கப்பட்ட இடங்களில் சீராக இடம்பெற்றுக்கொண்டிருந்த போதிலும், சில இடங்களில் தொடர்ந்தும் மணல் அகழப்படுவதால் அந்த இடங்களில் பெரியளவிலான பள்ளங்கள் தோன்றுவதாக பிரதேசவாசிகள் குறிப்பிட்டு வந்தனர்.

அதே வேளை நாகர் கோவில் பகுதியின் கரையோரப்பகுதி மக்கள் இந்த மணல் அகழ்வின் வருமானத்தின் ஒரு பகுதியை தங்களது பிரதேசத்தின் அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டும் என்றும் தனியே அம்பன் பகுதிக்குப் பயன்படுத்தக் கூடாதென்றும் ஏற்கனவே தங்களிற்குள் அரசல் புரசலாக கதைத்துவந்தனர்.

இதன் அடிப்படையில் மகேஸ்வரி நிதியம் நாகர்கோவில் பகுதியின் அபிவிருத்தியில் அக்கறை காட்டவில்லை என்றும் ஒருதரப்பினர் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். ஆனால் மறுபுறத்தில் மணல் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு புதிதாக இரண்டு அரசியல் கட்சிகள் திடீரென்று மூக்கை நுழைத்தனர்.

மின்சாரம் உட்கட்டமைப்பு வீட்டுவசதிகள் என பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களை இந்தப் பிரதேசம் கண்டிருக்கின்றபோதும் இந்தப் பிரதேசத்தின் வீதிகள் மட்டுமே இங்கு பெரும் குறையாக உள்ளது. இங்கு புதிதாக முளைத்த இந்த அரசியற் கட்சிகள் மக்களிற்காக கதைப்பது போன்று பாசாங்கு செய்தவாறு தமது வியாபாரத்தை முன்னிலைப்படுத்த முயற்சித்தார்கள்.

ஆரம்பத்தில் சரவணபவன் என்ற கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தனது நேரடிக்கண்காணிப்பில் இந்த மணல் வியாபாரத்தை நடத்துவதற்கு இந்த மணல் ஏற்றும் தொழிலாளர்களுடன் பேரம்பேசிய போதிலும் இதற்கு அவர்கள் மறுத்துவிட்ட வேளையில், உங்களிற்கு காசோலைகள் மகேஸ்வரி நிதியத்தால் தரப்படவில்லைதானே அதைவைத்து மண்அகழும் பணியை நிறுத்தி பகிஸ்கரிப்பில் ஈடுபடுங்கள் என்று இந்த மக்களைக் கேட்டுக்கொண்டார்.

இந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டபோது இங்குவந்த ஈ.பி.டி.பியின் மகேஸ்வரி நிதிய பொறுப்பாளர் ரஜீவிற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனிற்குமிடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதன்போது ஈ.பி.டி.பி உறுப்பினர்களைப் பார்த்து சரவணபவன் கள்வர்கள் என்று சத்தம் போட்டார்.

பதிலுக்கு சத்தமிட்ட ரஜீவ் சப்ராவில் களவெடுத்ததும் நீங்கள்தான் எலிஃபன்ற் கவுசில் கொள்ளை அடித்ததும் நீங்கள் தான் என்று கூறிய போது தலை குனிந்த சரவணபவன் மீண்டும் மக்கள் முகத்தில் முளிப்பதற்கு திண்டாடிக்கொண்டிருந்தார்.

இந்த நிலையில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரன் இந்த மண்வியாபாரத்தை தங்களது கட்சி உறுப்பினர் காண்டீபன் செயலாளராக இருக்கும் ப.நோ.கூ.சங்கத்திடம் ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

ஏற்கனவே ப.நோ.கூ.சங்கம் பல நிதி மோசடிகளில் ஈடுபட்டு அதுதொடர்பான விசாரணைகள் இடம்பெற்றுவரும் நிலையில் இக்கோரிக்கையை அங்கு முன்வைத்தபொழுது அத்தொழிலாளர்கள் நிராகரித்தனர்.

இந்த நிலையில் சரவணபவனின் வியாபார நோக்கமும் கஜேந்திரனின் வியாபார நோக்கமும் பிழைத்துப்போக மணல் விநியோகத்தை தடுக்கும் மார்க்கத்தை புதிதாக தேடத்தொடங்கினர்.

அடுத்ததாக மணலிற்கு அனுமதி உண்டா அனுமதிப்பத்திரம் எங்கே என்று இந்த இரண்டு கட்சிக்காரர்களும் கூக்குரல் இட்டபொழுது ரஜீவ் அதனைக் காட்டினார். வாயடைத்துப் போன அவர்கள் உதவி அரசாங்க அதிபர் தான் அனுமதிக்கவில்லையாம் என்று புதிதாய் ஒன்றைக் கண்டுபிடித்து குழப்பத்தைத் தொடர்ந்தனர்.

உதவி அரசாங்க அதிபர் வாயிலிருந்து. தான் அனுமதி குடுக்கவில்லை என்ற சாரப்பட ஒலிப்பதிவைப் பதிவுசெய்து அந்தத் தொழிலாளர்களிடம் காட்டி குழப்பம் விளைவித்து இறுதியில் மணல் வியாபாரத்தை முழுமையாகத் தடுத்துவிட்டனர்.

மணல் வியாபாரம் அல்லது மணல் அகழ்வு தடுக்கப்பட்டதால் இந்தத் தொழிலையே தங்களது பிரதான தொழிலாகக் கொண்டுள்ள 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்களது அன்றாட உணவுத்தேவைக்காக அவலப்படவேண்டிய நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளனர்.

ஒட்டுமொத்தத்தில் வடக்கின் அபிவிருத்திக்கு மண் பிரதானமானது. தங்களது சுய அரசியலிற்காக இந்த மணலைத் தடுப்பதன் மூலம் இந்த இரண்டு கட்சிகளின் கூட்டு வியாபாரிகளும் இந்தத் தொழிலாளர்களின் வயிற்றில் மட்டுமல்ல வடக்கின் அபிவிருத்திக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 100நாள் வேலைத்திட்டத்திற்கும் முட்டுக்கட்டை இடுகின்றார்கள் என்பதே உண்மையாகும்.

- இராவணன், அம்பன்.

ஊடுருவும் சூரிய ஒளி போன்றது உண்மை: அதை யாராலும் மூடி மறைக்க முடியாது! - மில்டன்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தமிழ்மக்கள் கட்டுண்ட மாயமுடிச்சு!

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் செல்ல முடியாது; 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையிலேயே தீர்வு என்று அழுத்தந் திருத்தமாக உரைத்து வருகிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றியடைந்து தேர்தலுக்கு முன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் பிரதமராகப் பதவியேற்ற பின்பு, பல பேட்டிகளிலும் சந்திப்புகளிலும் ரணில் இதைத் தெரிவித்து வருகிறார்.

13ஆவது திருத்தத்தை ஒரு தீர்வாக ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், அதை துடைப்பக் கட்டையால் கூட தீண்ட மாட்டோம் என்றும் சொல்லிவருகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், இரு வாரங்களுக்கு முன் தாங்களே அமைத்த இந்த அரசாங்கத்தின் தலைவர் கூறுவதற்கு பிரதிபலிப்பு ஏதும் காட்டாமல் ஏன் "கம்"மென்றிருக்கிறார்கள்?

அரசின் தேசிய நிறைவேற்றுச் சபையில் இருக்கும் இரா.சம்பந்தன் அவர்கள், அரசின் பிரதமர் இவ்வாறு கூறிவருவது பற்றிக் கேள்வியெழுப்ப வேண்டாமா?

தமிழ் பேசும் மக்களின் வாக்குகளால் வந்த பிரதமர், பதவியேற்ற இரண்டு வாரத்திலேயே நாலைந்து முறை தீர்வு பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சொல்லிவருவதற்கு முற்றிலும் மாறான கருத்து சொல்லியிருப்பதை எவ்வாறு கேட்டுக்கொண்டு மௌனமாயிருக்கிறார்கள்?

"அவர் சிங்கள மக்களுக்காக, வரும் பாராளுமன்றத் தேர்தலிலும் அவர்களைச் சமாளிப்பதற்காக அந்தக் கருத்தைச் சொல்கிறார்; நாங்களும் வரப்போகும் தேர்தலிலும் எங்கள் மக்களின் கிளுகிளுப்பிற்காக சமஷ்டி, தன்னாட்சி, தனியலகு கதைகளைச் சொல்லுவோம்" என்பதுதான் விஷயம் என்றால், தொடரும் இந்தப் பம்மாத்தை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டாமா?

13ஆவது திருத்தத்திற்கு மேல் எதையும் மூச்சுவிடாமல், 13 ஆவதிற்குள்ளும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றி ஏதும் பறையாமல் தேர்தலுக்கு முன்பும் தீர்வுக்கான எந்த வாக்குறுதிகளும் வழங்காமல், தேர்தலின் பின்பும் கூட்டமைப்பின் கோரிக்கைகள் லட்சியமே பண்ணப்படாமல் இருக்கும் நிலையில்...

"பொன்சேகாவுக்கு வாக்களியுங்கள்... சிறிசேனாவுக்கு வாக்களியுங்கள்..." என்று மக்களிடம் சொல்வதும், பிறகு "அந்தப்பக்கம் ஒருத்தரும் சரியில்லை" என்று பிலாக்கணம் வைப்பதுமாக இது என்ன நாடகம்?

ஆ... ஊ... என்றால் மாவையார் "அகிம்சைப் போராட்டம் வெடிக்கும்" என்று தீப்பொறி ஆறுமுகம் பாணியில் சவால் விட ஆரம்பித்துவிடுகிறார்.

இரண்டு வாரத்திற்கு முன்தான் "மாற்றம் மலரட்டும்; 2015-ல் நிச்சயம் தீர்வு" என்றெல்லாம் சொல்லி, கொண்டுவந்த அரசை, பதவியில் இருத்திய மறுவாரமே "இந்த அரசும் சரியில்லை; வெடிக்கும் போர்" என்று அதே வாயாலேயே முழங்குகிறார்கள்.

இப்படியே அடுத்த தேர்தல் வரும் வரை அகிம்சைப்போர் இவர்கள் வாயிலேயே வெடித்துக் கொண்டிருக்கும்; அலுவல் ஒன்றும் நடக்காது. தேர்தல் வரும். "அடுத்த அரசாங்கத்தையும் மிரட்டுவதற்கு தமிழ் மக்கள் ஒற்றுமையாக எங்களுக்கு வாக்களித்தால்தான் நடக்கும்" என்று தேர்தல் மேடைகளில் முழங்கி வெற்றிபெறுவார்கள்.

இந்தத் தேர்தலில் இவர்கள் வாக்களிக்கச் சொல்லிக் கொண்டுவந்த இரு தலைவர்களில் ஒருவர்தான் அடுத்து வரும் ஆட்சியையும் அமைப்பார். அவரும் "13வது திருத்தத்திற்குள்..." என்றுதான் ஆரம்பிப்பார். மீண்டும் அகிம்சைப்போர்.... மீண்டும் தேர்தல்....

இந்த மாயமுடிச்சை தமிழ்மக்கள் அவிழ்த்து வெளியே வருவது எப்போது?

- ஆசிரியர்

# பொலிஸ் காவலில் மரணம்; தடுத்து நிறுத்த நடவடிக்கை

## நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ வேண்டுகோள்

(கொழும்பு)

பொலிஸ் காவலில் ஏற்படும் மரணங்களை நிறுத்துவதற்கு புதிய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ள நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, பொலிஸ் மற்றும் நீதிமன்ற காவலில் உள்ளவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரியுள்ளார். சர்வதேசத்தின் கண்காணிப்பின் கீழ் உள்ள நாடொன்றில் இவ்வாறு பொலிஸ தடுப்புக்காவலில் மரணங்கள் நிகழ்வது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் என்றார்.

பொலிஸ் காவலில் உள்ளவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய சிவில் அமைப்புகளுடைய பங்களிப்பும் கோரப்படும், இது குறித்து அரசாங்கம் அலட்சியமாக இருக்க முடியாது. பொலிஸ் காவலில், தடுப்புக்காவலில், நீதிமன்ற பாதுகாப்பில் மரணங்கள் ஏற்படுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் என்பதே அடிப்படை உண்மை.

சர்வதேச சமூகத்தினர், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், சிவில் அமைப்பினர் என பலர் தங்கள் கரிசனைகளை வெளியிட்ட போதிலும் முன்னைய அரசாங்கம் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை. பல முக்கிய சம்பவங்களில் தொடர்புபட்டிருந்த சந்தேக நபர்களும் மர்மமான முறையில் கடந்த காலங்களில் மரணித்துள்ளனர்.

நவம்பர் 2012 இல் வெலிக்கடை சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தை அடக்குவதற்கு அரசாங்கம் பயன்படுத்திய முறைகள் குறித்து புதிய விசாரணைகள் இடம்பெறும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சந்தேக நபர்கள் மீது விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

தம்புத்தேகம நகரத்தில் வீதி ரோந்தில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதல் மேற்கொண்டு, பொலிஸ் அதிகாரி ஒருவரின் துப்பாக்கியை கொள்ளையிட்டுச்சென்ற மூன்று சந்தேக நபர்கள் தொடர்பில் தம்புத்தேகம பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகள் மீதான இந்தத் தாக்குதல் சம்பவம் கடந்த திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

# அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்காக "கட்அவுட்"களை அகற்றுமாறு உத்தரவு

## பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு).

அரசியல் கலாசாரத்தை மாற்ற வேண்டும் என எண்ணி ஜனாதிபதியும் தானும் தமது கட்அவுட்களையும் சுவரொட்டிகளையும் அகற்றுமாறு உத்தரவிட்டதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தெனியாய பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். தற்போது ஜனாதிபதியின் முகத்தையும் எனது முகத்தையும் கட்அவுட்களிலும் சுவரொட்டிகளிலும் காணமுடியாது.

அவற்றில் மகிந்த ராஜபக்ஷவின் முகத்தை மாத்திரமே காண முடியும். அவரது கட்அவுட்களையும் சுவரொட்டிகளையும் அகற்ற வேண்டாம் என்று கூறினோம். அவை இருந்தால் அனைவருக்கும் மிகவும் நல்லது. நாங்கள் புதிய அரசியல் கலாசாரத்தை நோக்கி செல்கிறோம். நாங்கள் அதனை நோக்கி செல்வது மக்களின் வெற்றியாகும். நாங்கள் மக்களுக்கு சேவைகளையே செய்கிறோம் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

இந்த சேவையை முழு நாட்டுக்கும் கொண்டு செல்ல வேண்டும். இலங்கையின் இளைஞர், யுவதிகளுக்கும் எதிர்காலம் இருக்க வேண்டும் எனவும் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்க அப்பிள்களை கண்டுபிடிக்க விசேட சுற்றிவளைப்பு ஆரம்பம்

அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள அப்பிள்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களை சுற்றிவளைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அப்பிள்களை உட்கொள்ள வேண்டாம் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண வேண்டுகோள் விடுத் துள்ளார்.

அப்பிள் விற்பனை செய்யப்படுகின்ற இடங்களை நாடளாவிய ரீதியில் சோதனைக்கு உட்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அப்பிள்களை உட்கொள்வதன் மூலமாக பக்டீரியா தாக்கம் ஏற்படும் அபாயம் உள்ளதால் அமெரிக்காவிலிருந்து நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட அப்பிள்களை மீண்டும் களஞ்சியப்படுத்துமாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

அமெரிக்காவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள அப்பிள்கள் உணவுக்கு பொருத்தமற்றது என்பதால் அவற்றை உட்கொள்ள வேண்டாம் என சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது. உணவு பாதுகாப்பு நடவடிக்கைக்காக இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் உணவு பாதுகாப்பு பிரிவின் பணிப்பாளர் விஷேட வைத்திய நிபுணர் ஆனந்த ஜயலால் தெரி வித்தார்.

இதேவேளை, குழந்தைகள், முதியோர் மற்றும் கர்ப்பிணித் தாய்மார் போன்ற நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள் பக்றீரியாவினால் பாதிக்கும் அபாயம் அதிகமுள்ளதாக கொழும்பு சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் ரத்னசிறி ஏ ஹேவகே குறிப்பிட்டுள்ளார். எனினும் அநாவசியமான முறையில் பதற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சிராந்தி ராஜபக்ஷ மீது நேற்று முறைப்பாடு பதிவு

(கொழும்பு)

கையூட்டல் மற்றும் ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழுவில் நேற்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் சிராந்தி ராஜபக்ஷ மீது முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் உதவி பொலிஸ் அதிகாரி வாஸ் குணவர்த்தனவின் மனைவி இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

திறைசேரியினால் 500 இலட்சம் ரூபா பெறுமதியான 100 கிலோ தங்கம் விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் தமது கணவரான வாஸ் குணவர்த்தன விசாரணைகளை மேற்கொண்டார்.

இதன்போது இந்த விற்பனையில் சிராந்தி ராஜபக்ஷ தொடர்புபட்டுள்ளதாக தகவல் வெளியானது.

இதன்போது உதவி பொலிஸ் அதிபர் அனுர சேனாநாயக்க, விசாரணையை நிறுத்துமாறு உத்தரவிட்டார்.

அத்துடன் இந்த விடயம் பொய்யானது என்று கூறி ஊடகங்களுக்கு கருத்துரைக்குமாறும் தமது கணவரிடம் கோரப்பட்டது.

எனினும் அதனை மேற்கொள்ளாதநிலையிலேயே தமது கணவரும், மகனும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதாக வாஸ் குணவர்த்தனவின் மனைவியான சாமலி தெரிவித்துள்ளார்.



**மத்திய அமைச்சு பதவியை பெறாவிடினும் இந்த ஆட்சியாளர்களுடன் ஒருவித இணக்க அரசியலுக்கு தயாராகியுள்ளனர் கூட்டமைப்பினர். கடந்த காலங்களில் மத்திய ஆட்சியை நோக்கி வசைபாடுவதும் வம்புக்கிழுப்பதும் சவால் விடுவதுமாய் பல தேர்தல்களை வென்றவர்கள் இந்த கூட்டமைப்பினர். ஆனால் இனிவரும் தேர்தல்களில் அந்த வெற்று தோட்டாக்கள் செல்லுபடியாகுமா?**

# மைத்திரியின் காலம் உங்களுக்கு ஒரு சவால் விட்டிருக்கிறது

**இனிமேல் அறிக்கைவீரன் அரியநேத்திரன் போன்றோரையோ தூசன புகழ் சிவாஜிலிங்கம் தரவளிகளையோ வைத்துக்கொண்டு கூட்டமைப்பினர் காலம்கடத்த முடியாது. கடந்த காலங்களில் மற்றையோரை நோக்கி சவால்கள் விட்டுக்கொண்டே காலத்தை ஓட்டியவர்களுக்கு காலம் இப்போது சவால் விட்டிருக்கின்றது... செய்து காட்டுங்கள் என்று.**

## எழுகதிரோன் கட்டுரையிலிருந்து

அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் இலங்கை தமிழரின் அரசியல் பாதையிலும் பல புதிய பரிணாமங்களுக்கு வழிவகுத்துள்ளது. அதாவது இலங்கைத்தமிழரின் இனப்பிரச் சினை. வரலாற்றில் பல முக்கிய திருப்பங்களுக்கு காரணமாய் இருந்துவரும் தமிழரசுக்கட்சி கடந்த ஜனாதிபதி தேர்தலில் எடுத்த நிலைப்பாடே அதற்கு காரணமாயிற்று.

இந்த மாற்றமானது தமிழ் மக்களின் வாழ்வை மேம்படுத்து வதாக அமையுமா? அல்லது "மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில்" நிலைக்கு இட்டுச்செல் லுமா? என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஏகாதிபத்திய சார்பு அரசியல் நிகழ்ச்சி நிரல்களுடன் இணங் கிப் போவதென்னும் தமிழ் மேட்டுக்குடி தலைமைகளின் வர்க்க நிலைப்பாடு இலங்கை யின் நீண்டகால வரலாற்றில் ஒன்றும் புதியதல்ல.

அத்தோடு 2002-ம் ஆண்டு நோர்வே தலைமையிலான சமாதான ஒப்பந்தத்துடன் தமிழ் ஊடகங்கள் ஐக்கிய தேசியக் கட்சியையும் அதன் தலைவர் ரணில் விக்ரமசிங்காவையும் தமிழ் மக்களின் இரண்டாவது தேசிய தலைமையாகவே வரித்துக்கொண்டன. இதன் தொடரை அண்மையில் நடந்த ஜனாதிபதி தேர்தலையொட்டியும் தமிழ் மீடியாக்கள் நிகழ்த்தி முடித்தன.

ஜனாதிபதி ஆட்சிக்கு வந்ததும் நியமித்த ரணில் தலைமை யிலான புதிய காபந்து அரசாங் கத்தில் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு பங்கெடுக்கும் என்றும் அதில் கூட்டமைப்பின் சுமந் திரன் அமைச்சு பதவிய்யை பொறுப்பெடுப்பார் என்று பரவலாக நம்பப்பட்டது.

அதற்கிடையில் எங்கட மட்டக்களப்பு எம்.பி அரியநேத் திரன் மைத்திரி வென்றால் தனக்கு நீதியமைச்சு கிடைக்கு மாம் என்று வாகரைச் சனங் களோட காதில பூ வைத்துக் கொண்டு திரிந்தது போன்ற நகைச் சுவைகளும் இடம்பெற்றன.

இறுதியில் மத்திய அரசாங்க மந்திரி சபையில் அமைச்சு பதவி எடுப்பதில்லை என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விலகிக்கொண்டது. இதற்கான காரணத்தை மக்களுக்கு இதுவரை கூட்ட மைப்பினர் உத்தி யோகபூர்வமாக தெளிவுபடுத்தா விடினும் அது மலிந்து சந்தைக்கு வந்து விட்டது.

கடந்த வாரம் (17.01.2015) அன்று மட்.-விவேகானந்தா மகளிர் வித்தியாலய நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய செல்வராஜா எம்.பி நாம் அமைச்சு பொறுப்புக்கள் எடுத்தால் எமது வாய்கள் அடைபட்டுப்போகும் என்று உண்மையை ஒப்புக்கொண்டு பேசியுள்ளார்.

ஆக கூட்டமைப்பினர் அமைச்சு பொறுப்புகளை எடுத்து மத்திய ஆட்சியாளர்களுடன் இணக்க அரசி யலை மேற்கொண்டால் பின்பு துரோகிகள் என சுட்ட தங்களுக்கு யாருமில்லாது வாயடைத்துப்போகும் நிலை உருவாகும் என்பதை அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

துரோகி என மற்றையோரை நோக்கி சுட்டு விரல் நீட்டிக்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எப்படி புனிதர் களாக்கி கொள்கின்றார்கள் என்பதை இது உணர்த்துகின்றது.

மத்திய மந்திரி சபையில் கூட்டமைப் பினர் பங்கெடுக்கா விடினும் மக்கள் தமது வாக்குகளை தமிழ் தேசிய கூட்டமைப்பு திசைகாட்டிய பக்கம் வாரி வழங்கிவிட்டு புதிய ஆட்சியாளர்களை நோக்கி பாரிய நம்பிக்கையுடன் காத் திருக்கின்றார்கள். புதிய ஜனாதிபதியும் அவரது பங்குக்கு வடமாகாண ஆளு- னரை தான் பதவியேற்ற எட்டாம் நாளே மாற்றித் தந்திருக்கின்றார். இதன்படி வட மாகாண ஆளுநராக இராணுவத்தை சாராத வெளியுறவுத் துறையின் முன்னாள் செயலர் பலிஹக்கார ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் வட மாகாண சபை தேர்தலுக்கு முன் பிருந்தே ஆளுநரை மாற்றாவிட்டால் சபையை இயக்குவது கடினம் என்று குரல்கொடுத்து வருகின்றார்கள் அதன்படி புதிய ஆளுநர் நியமனத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வரவேற்ப தாக அதன் தலைவர் சம்பந்தன் கருத்து வெளியிட்டுள்ளார்.

தேசிய நிறைவேற்று சபை என்ற உயர் சபையை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன நியமித்துள்ளார். 100 நாள் வேலைத்திட்டத்தில் உறுதி யளிக்கப்பட்டுள்ள அரசியல் அமைப்பு திருத்தங்கள், கடந்த அரசின் ஊழல் சட்டவிரோத நடவடிக்கைகள், மனித உரிமை மீறல்கள், ஜனாதிபதித் தேர்த லின் போது பெற்ற முறைகேடுகள், கொழும்பு முறைகேடுகள், கொழும்பு மாநகரிலும், வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுக்க நடைபெற்ற காணிக் கொள்ளைகள், தேசிய கணக்காய் வாளர் நடவடிக்கைகள் உட்பட புதிய அரசாங்கத்தின் தேசிய முன் னெடுப்பு தொடர்பாக ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் இந்த சபை ஜனாதிபதி செயலகத்தில் கூடி ஆராய்ந்து முடிவுகளை எடுக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சபையின் அங்கத்தவர்களாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிர- தமர் ரணில் விக்ரமசிங்க, வண. சோபித தேரர், சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க, இரா.சம்பந்தன், மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன், சரத் பொன்சேகா, அனுர குமார திசாநாயக்க, சம்பிக்க ரண வக்க ஆகிய பதினொரு பேர் பணி யாற்றவுள்ளனர்.

மத்தியில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் காரணமாக கிழக்கு மாகாணத்திலும் ஆட்சி மாற்றச் சூழல் உருவாகியிருக் கிறது. 2012-ம் ஆண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் 37 உறுப்பினர்களில் 15 உறுப்பினர்களை வென்றிருந்த ஐ.ம.சு.கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவுடன் 22 உறுப்பினர் களைக் கொண்டு ஆட்சியை அமைத்துக் கொண்டது. தற்போது முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் ஐ.ம.சு. கூட்டமைப்புக்கான ஆதரவை விலக்கிக் கொண்டுள்ள நிலையில் தற்போதைய ஆட்சி பெரும்பான்மை பலத்தை இழந்துள்ளது.

கிழக்கு மாகாண சபையில் தற்சமயம் எதிர்க்கட்சி வரிசையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 11, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 7 இக்கட்சியில் அதவுல்லா கட்சியின் உறுப்பினர் அண்மையில் இணைந்து கொண்டமையால் தற்போது 8 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் 4 உறுப்பினர்களுடன் இப்போது ஐ.ம.சு.கட்சியில் இருந்து இணைந்த உறுப்பினரையும் சேர்த்து 5 உறுப்பினர்கள், அகில இலங்கை மக்கள் காங்கிஸின் 3 உறுப்பினர்களு மாக 27 பேர் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த புதிய ஜனாதிபதி ஆட்சிமாற்றம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரின் அர சியல் பாதையை பல வழிக ளிலும் திசைதிருப்பி விட்டிருக்கின்றது. கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக மைத்திரியை ஆதரிக்கப்போய் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு கடந்த காலங்களைப்போல் எதிர்ப்பு அரசியல் செய்து வயிறுவளர்ப்பதில் மண் விழுந்திருக்கின்றது. மத்திய அமைச்சு பதவியை பெறா விடி- னும் இந்த ஆட்சியாளர்களுடன் ஒருவித இணக்க அரசியலுக்கு தயாராகியுள்ளனர் கூட்டமைப்பினர். கடந்த காலங்களில் மத்திய ஆட்சியை நோக்கி வசைபாடுவதும் வம்புக்கிழுப்ப தும் சவால் விடுவதுமாய் பல தேர்தல்களை வென்றவர்கள் இந்த கூட்டமைப்பினர். ஆனால் இனி- வரும் தேர்தல்களில் அந்த வெற்று தோட்டாக்கள் செல்லுபடியாகுமா?

ஆகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் எதிர்கொள்ளும் புதிய சவால்களாக இவை இனம்காணப்படுகின்றன.

வடக்கில் புதிய ஆளுநரை பயன்படுத்தி சபையின் சீரான செயல்பாடுகளை முன்னெடுக்கும் பொறுப்பிலிருந்து இனி தப்ப முடியாது.

கிழக்கில் ஆளும்கட்சியாக பொறுப் பெடுத்தால் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் என்று தமது ஆட்சித் திறனை நிரூபிக்க வேண்டும்.

தேசிய நிறைவேற்று சபையில் ஜே.வி.பி அனுரகுமார திசாநாயக்க சிஹல உறுமய சம்பிக்க ரணவக்க போன்றவர் களுடன் கலந்துபேசி உரையாடி விவா தித்து தமது சாணக்கியத்தை நிரூபிக்க வேண்டும். கடந்த கால அரசு நியமித்த பாராளு மன்ற தெரிவுக்குழுவுக்கு அங்கே இனவாதிகள் இருப்பதால் நாம் அங்கு போக முடியாது அவர்களுடன் பேச மாட்டோம் அடம்பிடித்தவர்கள் இந்த கூட்டமைப்பினர்தான்.

எனவே இனிமேல் அறிக்கைவீரன் அரியநேத்திரன் போன்றோரையோ தூசன புகழ் சிவாஜிலிங்கம் தரவழி களையோ வைத்துக்கொண்டு கூட்டமைப்பினர் காலம்கடத்த முடியாது. கடந்த காலங்களில் மற்றயோரை நோக்கி சவால்கள் விட்டுக்கொண்டே காலத்தை ஓட்டியவர்களுக்கு காலம் இப்போது சவால் விட்டிருக்கின்றது... செய்து காட்டுங்கள் என்று.

# ஜெனிவாவை எதிர்கொள்வது எப்படி? திட்டத்தை சமர்ப்பிக்கிறார் ரணில்



(கொழும்பு)

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை சபிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவை நடாத்திய விசாரணையின் அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் நடக்கவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 28 ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதனை எதிர்கொள்வது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக, பிரதமர் செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மூன்று வகையான உள்ளீடுகளின் அடிப்படையில், ரணில் விக்கிரமசிங்க தனது அறிக்கையைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார். அடுத்து வரும் நாட்களில் அரச அதிகாரிகளுடன் தீவிரமான கூட்டங்களை நடாத்தவுள்ள ரணில் அவர்களின் பரிந்துரைகளையும், தனது அறிக்கையில் உள்ளடக்குவது குறித்து கவனத்தில் கொள்வார.

தற்போது பிரசெல்ஸ் சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளுடன் நடத்தவுள்ள பேச்சுக்களைக் கருத்திற்கொண்டு, அவர் அளிக்கும் பரிந்துரைகளையும் ரணில விக்கிரமசிங்க தனது அறிக்கையில் உள்ளடக்குவார். தனது அறிக்கையை இறுதி செய்வதற்கு முன்னதாக, ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவைச் சந்திக்கவுள்ள ரணில் விக்கிரமசிங்க, அவரது பரிந்துரைகள் மற்றும் திருத்தங்களையும் தனது அறிக்கையில் சேர்த்துக்கொள்ளவிருக்கிறார்.

இதையடுத்தே அமைச்சரவையின் அனுமதிக்காக ரணில் விக்கிரமசிங்க அந்த அறிக்கையை சமர்ப்பிப்பார் என்றும் அவரது செயலகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## முன்னைய அரசுடன் இணைவு தற்போது வருந்தும் திஸ்ஸ

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டமைக்காக வருந்துவதாக முன்னாள் சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். கடந்த அரசாங்கத்துடன் இணைந்து கொண்டமைக்காக கவலையடைகின்றேன். ஏதோவொரு கெட்ட கிரக நிலைமை காரணமாக இவ்வாறு நேர்ந்திருக்கும்.

தொடர்ந்தும் நான் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக கடமையாற்றுவேன். அரசியலை விட்டு விலகிப்போக எவ்வித உத்தேசமும் கிடையாது. எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தீர்மானங்கள் குறித்து விரைவில் அறிவிப்பேன் என தெரிவித்துள்ளார். சிங்கள ஊடகமொன்று அரசியல் எதிர்காலம் குறித்து திஸ்ஸ அத்தநாயக்கவிடம் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

## ஜனாதிபதித் தேர்தல் சூழ்ச்சி எதிராக சட்ட நடவடிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தினத்தன்று சூழ்ச்சித் திட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

இராணுவ சூழ்ச்சித் திட்டம் குறித்து பொலிஸார் விசாரணை நடாத்தி வருகின்றனர். விசாரணை மேற்கொண்டதன் பின்னர் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

இராணுவ சூழ்ச்சித் திட்டம் ஒன்று மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தமை அம்பலமானால், அவ்வாறான அதிகாரிகள் அரசியல்வாதிகளுக்கு எதிராக தராதரம் பாராது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த போது இராணுவ சூழ்ச்சித் திட்டத்தின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முயற்சித்தார் என குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுதந்திரக்கட்சி உறுப்பினர்களை பழிவாங்குகிறது அரசாங்கம்

### எதிர்க்கட்சித் தலைவர் நிமால் குற்றச்சாட்டு



(கொழும்பு)

நல்லாட்சி பற்றி பேசும் அரசாங்கம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை சிறையில் அடைப்பதாக குற்றம்சாட்டியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும் எண்ணிக்கையிலான உறுப்பினர்களுக்கு எதிராக போலிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தி, அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பல்வேறு அழுத்தங்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். புதிய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளை அருவெருப்புடன் கண்டிக்கின்றோம்.

அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்டுள்ள அனைத்து கட்சி உறுப்பினர்களுக்காகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குரல் கொடுக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

## கோத்தாவின் நிறுவன செயற்பாட்டை ஆராய சட்டத்தரணிகள் குழு நியமனம்

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவின் தனியார் பாதுகாப்பு நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கு அரச சட்டத்தரணிகள் குழுவொன்றை சட்டமா அதிபர் நியமித்துள்ளாரென தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னைய அரசின் கீழ் இடம்பெற்ற ஊழல்கள், முறைகேடுகள், சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருககின்றன.

இதில் முன்னாள் பாதுகாப்புச செயலாளரின் தனியார் பாதுகாப்பு நிறுவனமொன்றிற்கும், தனியார் நிறுவனமொன்றிற்கும் இடையிலான சர்ச்சைக்குரிய தொடர்பு பல அதிர்ச்சி தரும் கேள்விகளை எழுப்பியுள்ளன.

இது குறித்த விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார் தற்போது சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியுள்ளனர்.

ரக்னா ஆரக்ஷா லங்கா நிறுவனத்திற்கும் அவன்ட் கார்டேமரிடைம் சேர்விஸ் நிறுவனத்திற்கும் இடையிலான தொடர்பு குறித்தே தீவிரமாக ஆராய வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக சட்ட நிபுணர்கள் குழுவொன்றை இது குறித்து ஆராயுமாறு சட்டமா அதிபர் பணித்துள்ளார்.

அடுத்த வாரம் தமது விசாரணையை ஆரம்பிக்கவுள்ள குறிப்பிட்ட குழுவினர் இலங்கை அரசுக்கு தமமிடமுள்ள ஆயுதங்களை தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்குவதற்கு சட்டத்தில் இடமுள்ளதா எனவும் ஆராயவுள்ளனர்.

ரக்னா ஆரக்ஷா லங்கா நிறுவனம் முன்னாள் பாதுகாப்பு செயலாளருடையது.

குறிப்பிட்ட நிறுவனம் தன்னுடைய வருமானங்கள் குறித்து அரசுக்குத் தெரியப்படுத்தியதா என்பது தெரியவரவில்லை.

எனினும், இந்த நிறுவனம் அரச பணத்தையும், அரச வளங்களையும் பயன்படுத்தியுள்ளது.

தற்போது பலத்த சர்ச்சையில் சிக்கியிருக்கும் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் உட்பட முன்னைய அரசின் முக்கியஸ்தர்கள் பலர் இந்நிறுவனத்தின் பணிபபாளர் சபையில் இடம் பெற்றுள்ளனர். மேலும், இந்த நிறுவனம் பல அரச நிறுவனங்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கான ஒப்பந்தத்தையும் பெற்றுள்ளது. இந்த நிறுவனம் உணவு வழங்கும் சேவைகள், ஹோட்டல்கள் போன்றவற்றையும் நடாத்தி வந்துள்ளது.

## சர்ச்சைக்குரிய புரிந்துணர்வு ஒப்பந்தம் திஸ்ஸ அத்தநாயக்க மீது வழக்கு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் நாட்டை பிரிவினைக்குட்படுத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்தாகியது என பகிரங்கப்படுத்திய முன்னாள் சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க மீது குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ரணில் விக்ரமசிங்கவுக்கும் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டதாகத் தெரிவித்து போலி ஆவணமொன்றை, திஸ்ஸ அத்தநாயக்க பகிரங்கப்படுத்தியதாக அவர்மீது குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட குற்றப்புலனாய்வுப் பிரிவின்ர், திஸ்ஸ அத்தநாயக்கவினால் காண்பிக்கப்பட்ட ஒப்பந்தம் போலியானது என கண்டறிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், கையெழுத்து மோசடி தொடர்பில் திஸ்ஸ மீது வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு 7 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கக்கூடிய சாத்தியங்கள் சட்டத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தனது குற்றத்தினை ஒப்புக்கொண்டு நாடாளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமா செய்வதாகவும், அதன் மூலம் தனக்கு மன்னிப்பு வழங்கும்படியும் பிரதமர் ரணில் விக்ரம சிங்கவிடம் திஸ்ஸ அத்தநாயக்க பேரம் பேச தூது விட்டுள்ளதாகவும் அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை திஸ்ஸ அத்தநாயக்க இராஜினாமா செய்யும் பட்சத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் பிறிதொருவரை நாடாளுமன்றுக்குள் உள்வாங்கும் சாத்தியம் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## 20 பொருட்களின் விலைகள் இடைக்கால பட்ஜெட்டில் குறைப்பு

புதிய அரசின் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் 20 அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படவுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி இடைக்கால வரவு - செலவுத் திடடத்தில் பொதுமக்கள் மீது வரி சுமத்தப்படாத வகையில் அநேக அத்தியாவசிய உணவுப் பொருடகளின் விலைகள் குறைக்கப்படும்.

புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டு 20 நாட்களுக்குள் இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதென்பது எமது அரசிற்கு ஏற்பட்டுள்ள மிகப பெரிய சவாலாகும். ஜனாதிபதித தேர்தலின் போது நாம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டியது எமது பொறுப்பாகும்.

அரசாங்கத் துறையினரின் சம்பள அதிகரிப்பை போன்றே தனியார்துறையினரின் சம்பளத்தையும் அதிகரிப்பது பற்றிய யோசனைகளும் இடைக்கால வரவு -செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நிதியை வரி வசூலிப்பதன் மூலம் பெற்றுக்கொள்வதில்லை என்ற உறுதியான நிலைப்பாட்டில் புதிய அரசு உள்ளது.

கடந்த அரசு முன்னெடுத்த வீண் விரயம், ஊழல் மற்றும் மோசடியை முற்றாக நீக்குவதன் மூலம் கிடைக்கும் இலாபமே நிவாரணம் வழங்கப் போதுமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.





யாழ்.இந்திய துணைத்தூதரகத்தில் நேற்று இந்தியாவின் 66 ஆவது குடியரசு தினம் கொண்டாடப்பட்டது. இதன்போது இந்திய தேசியக் கொடியேற்றப்படுவதனையும் கொடிக்கு வணக்கம் செலுத்துவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (படங்கள்: இ.இராஜகுமார்)

# வளர்ப்பு மாடுகள் பதிவு

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள வளர்ப்பு மாடுகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய நிலையத்தினால், இப்பிரதேச செயலர் பிரிவில் வளர்க்கப்படும் மாடுகளின் விபரங்கள் பதிவு செய்யப்படுவதுடன் இந்த நிலையத்தினால் இலவசமாக வழங்கப்படும் படிவத்தினை பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் வசிப்பவர்கள் வளர்க்கும் மாடுகள் தொடர்பான விபரங்களை வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய நிலையத்தில் பதிவு செய்யுமாறு தெரிவிக்கப்படுகின்றது.

# விவசாய அமைச்சின் உழவர்விழா சிறப்பு




விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச் சின் உழவர் விழா நேற்றுமுன்தினம் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

வடமாகாண விவசாய கால்நடை அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமாகாணத்தில் மாவட்டரீதியாக விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பில் வீட்டுத் தோட்டம், ஆடுவளர்ப்பு, மாடுவளர்ப்பு, கோழிவளர்ப்பு, சேதனப்பயிர்ச் செய்கையாளர்களில் சிறந்து விளங்குபவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடமாகாண சுகாதார அமைச்சர் பசத்திய லிங்கம், கல்வி அமைச்சர் த.குரு குலராஜா உட்பட திணைக்கள தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். (70)

# கிராமப்புற பாடசாலைகளில் மாணவர்களின் இணைப்பு வீழ்ச்சி

## நகர்ப்புறத்தை நாடுவதே காரணம்

(ஏழாலை)

இந்த வருடத்தில் தரம் 1 இற்கான மாணவகளை சேர்க்கையில் அதிகளவான பெற்றோர் தமது பிள்ளைகளை நகர்ப்புறப் பாடசாலைகளில் இணைத்துள்ளனர். இதனால் கிராமப்புற பாடசாலைகளில் மாணவர்களின் இணைப்பு வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளதாக புத்திஜீவிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

தமது பிள்ளைகளின் எதிர்காலம், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை என்பனவற்றை கருத்தில் கொண்டே பெற்றோர்கள் இவ்வாறு நகரப்புற பாடசாலைகளில் தமது பிள்ளைகளை சேர்க்கின்றனர்.

இதனால் கிராமப்புறப்பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் பின்னடைவை ஏற்படுத்துவதாகவே அல்லது அமைகிறது. கிராமப்புற பாடசாலைகளிலும் தற்போது சிறப்பான கல்விச் செயற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றனர்.

எத்தனையோ கிராமப்புற பாடசாலைகளில் கல்விகற்ற மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து உயர்நிலையை எட்டியுள்ளனர். இது பற்றி பெற்றோர்கள் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

கிராமப்புறப் பாடசாலைகளின கல்விச் செயற்பாட்டை மேம்படுத்துவதற்கு பெற்றோர் தான் முன்வரவேண்டும்.

நகரப்புறப் பாடசாலையாகவோ அல்லது கிராமப் புறப் பாடசாலையாகவோ இருந்தாலும் பெற்றோர்களின் அக்கறையும் கவனமும் இருந் தால் தான மாணவர்களின் கல்வி மேம்பாடடையும் எனவும் இது தொடர்பில் பெற்றோர்கள் சிந்தித்து செயற் படவேண்டும் எனவும் கல்விமான்கள் தெரிவிக்கின்றனர். (66)

# பயணியின் தவறுக்காக காப்பாளருக்கு தண்டனை

## அதிகாரி மீது குற்றம் சாட்டும் பயணிகள்

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்ற அரச பேருந்தில் பயணி செய்த தவறுக்கு பேருந்து காப்பாளர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டமைக்கு அப்பேருந்தில் பயணம் செய்த ஏனைய பயணிகள் விசனமடைந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்ற பேருந்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த பேருந்தில் காப்பாளர் பயணிகள் அனைவருக்கு பயணச் சீட்டு வழங்கியதுடன் பருவகால சீட்டினையும் பெற்றும் வெட்டி பயணிகளிடம் சமர்ப்பித்தார். அத்துடன் யாரேனும் சீட்டுப் பெற தவறி இருந்தால் பெற்றுக்கொள்ளுமாறு உரத்த தொனியில் தமிழ் மற்றும் சிங்கள மொழியில் கேட்டுக்கொண்டதுடன் தொடர்ந்து பேருந்தில் ஏறிய பயணிகளுக்கும் சீட்டுக்களை வழங்கிக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் பளைப்பகுதியில் ஏறிய திடீர் சோதனை அதிகாரிகள் ஒரு பயணி மட்டும் சீட்டு இல்லாததைக் கண்டு பயணியிடம் கேட்க அவரும் தீான் உறங்கிக் கொண்டிருந்ததால் சீட்டு எடுக்க மறந்து விட்டதாக தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

அதிகாரிகள் காப்பாளரிடம் கேட்டதற்கு தான் பலமுறை அறிவித்தும் இவர் சீட்டு எடுக்கவில்லை எனவும் பருவகால சீட்டு பயணிகள் இருந்ததால் சரியாக கணக்கிடமுடியவில்லை எனவும் கூறியுள்ளார்.


இதனைக் கேட்டபின் பரிசோதனை அதிகாரிகள் சீட்டு பெற்றுக் கொள்ளாத பயணிக்கு தண்டம் அறவிடாமல் காப்பாளருக்கு எதிராக குற்றப்பத்திரம் எழுதியுள்ளனர். இது தமக்கு விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இது தொடர்பில் தாம் அதிகாரிகளிடம் கேட்டபோது இது உங்களுக்குத் தேவையில்லாத விடயம், உங்கள் வேலையை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள் என தெரிவித்தனர். அரச பேருந்து சேவை கட்டுக்கோப்புடன் கூடிய ஒழுக்கமான அதிகாரிகளைக் கொண்ட ஒரு அரச ஸ்தாபனம் என்ற எதிர்பார்ப்பினாலேயே நாம் இச் சேவையை நாடுகிறோம் என தெரிவிக்கும் பயணிகள் நேர்மையாக நடந்து கொள்ளும் அரச ஊழியர் மீதும் பொது மக்கள் அக்கறை கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

# முரசின் இன்றைய பலன்

(27.01.2015 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் தை மாதம் 13 ஆம் திகதி.
அட்டமி / அமிர்த சித்தம்.
அச்சுவினி நட்சத்திரம் பி.ப. 04.37 வரை. பின் பரணி.
இராகு காலம் 03.36 - 05.06 வரை. சுபநேரம் 11.06 - 12.36 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**: தொல்லை கொடுத்து வந்தவர் பெட்டிப்பாம்பாக அடங்கிவிடல்.

**ரிஷபம்**: செய்தொழிலில் அலட்சியமாக இருந்து விடாதீர்கள்.

**மிதுனம்**: தடைப்பட்டிருந்த விவாகம் இனிய செய்தியைக் கொண்டு வரும்.

**கடகம்**: சுற்றாடல் சுத்தம் பேணாமையினால் தண்டம் தக்க வைத்தல்.

**சிம்மம்**: நிலுவையின் ஒருபகுதியாவது வந்ததையிட்டு திருப்திப்படல்.

**கன்னி**: சம்பந்தமில்லாத விடயங்களை எண்ணி மனக்குழப்பம் ஏற்படல்.

**துலாம்**: சூடுமானவரை முடிவெடுப்பதில் பிறரின் ஆலோசனையைக் கேட்கவேண்டாம்.

**விருச்சிகம்**: எதிர்கால வாழ்விற்காக முதலீடு செய்யும் சிந்தனை ஓங்கும்.

**தனுசு**: சக ஊழியர்களை அரவணைத்து இலக்கினை வெற்றிகரமாக் குங்கள்.

**மகரம்**: உறவினர்களுடன் ஏற்பட்ட மனத தாங்கல் விட்டுக் கொடுப்பினால் அகன்றுவிடல்.

**கும்பம்**: சிலநாட்களாக வருந்திக் கொண்டிருந்த நோயின் உபாதை நீங்கும்.

**மீனம்**: பொறுப்பின்றி உதவி செய்வதை கைவிட்டு விடுங்கள்.

# 2022 கால்பந்து உலகக் கிண்ணம் நவம்பர், டிசம்பரில் நடாத்த பரிந்துரை

2022ஆம் ஆண்டு கட்டாரில் நடைபெறவுள்ள கால்பந்தாட்ட உலகக்கிண்ண தொடர் நவம்பர் -டிசம்பர் மாதங்களில் நடாத்தப் படுவதே நல்லது என ஆசிய கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் செய்க் சல்மான் பின் இப்ராஹிம் அல் காலிபா தெரிவித்துள்ளார்.

அந்தக் காலப்பகுதி குளிர் காலமாக இருப்பதனால் அனைத்து நாட்டு வீரர்களும் அதனை விரும்புவார்கள். வெப்ப காலத்தில் போட்டிகளை நடாத்தினால் வீரர்கள் அசௌ கரியங்களை எதிர்கொள்வார் கள். அதேவேளை 2022ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளும் நடைபெறவுள்ளமையினால் அந்த நிகழ்வுகள் நடைபெறும் காலப்பகுதி இல்லாமலும் இருக்க வேண்டும். எனவே இந்தக் காலப்பகுதியே பொருத் தமானது என கட்டார் கால் பந்தாட்ட சம்மேளனத் தலைவர் செய்க் சல்மான் பின் இப்ராஹிம் அல் காலிபா தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஐரோப்பிய போட்டிகளை கவனத்திற் கொண்டு வசந்தகாலத்தில் போட்டிகளை நடாத்துவது பொருத்தம் என்ற கோரிக்கைக ளும் வெளிப்படுத்தப்பட் டுள்ளன.

பாரம்பரியமாக இந்தத் தொடர் நடாத்தப்படும் ஜூன் - ஜூலை காலப்பகுதியில் கட்டாரில் 50 பாகை செல்சியஸ் வெப்பம் இருக்கும் என்ற காரணத்தினா லேயே இந்தத் திட்டம் எடுக்கப் பட்டுள்ளது.

குறித்த திட்டத்திற்காக சர்வதேச கால்பந்தாட்ட சம்மே ளனம் ஓர் அமைப்பை உரு வாக்கி இந்த விடயங்களை ஆராய்ந்து சரியான காலப்பகு தியை தெரிவு செய்யுமாறு கூறி யுள்ளது.

இந்த அமைப்புக்கு செய்க் சல்மான் பின் இப்ராஹிம் அல் காலிபா தலைமை தாங்குகின்றார.

# மௌனம் கலைத்த டோனி



ஐபிஎல் சூதாட்ட பிரச்சனை குறித்து வாய் திறந்து பேசி யுள்ளார் இந்திய அணித்தலைவர மகேந்திர சிங் டோனி.

இது குறித்து தோனி கூறு கையில், ஐபி.எல்., சூதாட்ட சர்ச்சையில் எனது பெயரும் இடம் பெற்றுள்ளதாக வந்த கற் பனை செய்தியை எதிர்பார்க்க வில்லை. இதனை ஒருபோதும் தடுக்க முடியாது.

இவ்விடயத்தை கவனமாக கையாள்கிறேன். ஒருவேளை இப்பிரச்னை முற்று பெற்றாலும், ஓரிரு நாட்களில் மற்றொரு கற் பனை செய்தி வெளியாகலாம் என்று கூறியுள்ளார்.

# ரொனால்டோவிற்கு சிவப்பு அட்டை வென்றது ரியல் மட்ரிட்



லா லிகா கால்பந்து தொடரின் கார்டொபா அணிக்கு எதிரான போட்டியில் ரியல் மட்ரிட் அணி வெற்றி பெற்றுள்ளது.

எதிரணி வீரருடன் மோதலில் ஈடுபட்ட ரியல் மாட்ரிட் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ சிவப்பு அட்டை பெற்று வெளி யேறினார்.

இருப்பினும் ரியல் மட்ரிட் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஸ்பெயினின் மட்ரிட் நகரில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கார்டொபா-மட்ரிட் அணிகள் மோதின.

இரண்டாவது நிமிடத்தில் கார்டொபா அணிக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பை, நபில் கிலாஸ் கோலாக மாற்றினார்.

27ஆவது நிமிடத்தில் கரீம் பென்ஸிமா கோல் அடிக்க, ஆட்டம் 1-1 என சமநிலை அடைந்தது.

போட்டி முடிவதற்கு ஏழு நிமிடங்களே இருந்த நிலையில், எதிரணி வீரர் எடிமருடன் மோத லில் ஈடுபட்டதால் ரொனால் டோவுக்கு நடுவர் சிவப்பு அட்டை காண்பித்தார்.

இதன் மூலம் தனது கால்பந்து வாழ்வில் அவர் ஒன்பதாவது முறையாக சிவப்பு அட்டை பெற்றுள்ளார்.

87ஆவது நிமிடத்தில் கேரத் பேல் பெனால்டி வாய்ப்பை கோலாக மாற்றினார்., முடிவில் ரியல் மட்ரிட் வெற்றி பெற்றது.

போட்டி முடிந்த பின் ரொனால்டோ தனது கட்டுரை பக்கத்தில், எடிமர் உடன் கடுமை யாக மோதிக் கொண்டதற்காக, அவர் உட்பட ஒவ்வொருவரி டமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன் என வருத்தம் தெரிவித்திருந்தார்.

# அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் அசரென்கா வெளியேற்றம்



(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் அசரென்கா வெளியேற்றப்பட்டதுடன காலிறுதிக்கு சிபுல்கோவா தெரிவானார்

கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டி மெல்பேர்னில் நடைபெற்று வருகிறது.

நேற்றுக் காலை நடந்த பெண்கள் ஒற்றையர் 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் 11ஆம் நிலை வீராங்கனையான டொமினிகா சிபுல்கோவா (சுலோவாக்கியா) முன்னாள் முதல் வரிசை வீராங்கனையான விக்டோரியா அசரென்கா (பெலாரஸ்) மோதினார்கள்.

இதில் 2 முறை சம்பியனான (2012, 2013) அசரென்கா அதிர்ச்சிகரமாக தோற்று போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டார். சிபுல்கோவா 6-2, 3-6, 6-3 என்ற கணக்கில் வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றார். அவர் கடந்த முறை இறுதிப்போட்டி வரை வந்து தோல்வி அடைந்திருந்தார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டங்களில் ரபெல் நடால் (ஸ்பெயின்) தோமஸ் பேர்டிச் (செக்குடியரசு), முர்ரே (இங்கிலாந்து) நிக் கைரோஜிஸ் (அவுஸ்ரேலியா) மோதுகிறார்கள்.

இதேவேளை நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் ஷரபோவா, பவுச்சர்ட்ஆகியோர் காலிறுதிக்கு தகுதி பெற்றனர்

மரியா ஷரபோவா சீனாவைச் சேர்ந்த 21ஆம் நிலை வீராங்கனை பெங்கை எதிர்கொண்டார். இதில் ஷரபோவா 6-3, 6-0 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார். அவர் காலிறுதியில் கனடாவை சேர்ந்த 7 ஆம் நிலை வீராங்கனை பவுச்சர்ட்டை சந்திக் கிறார்.

பவுச்சர்ட் 4ஆவது சுற்று ஆட்டத்தில் 6-1, 5-7, 6-2 என்ற கணக்கில் ருமேனியாவை சேர்ந்த இரினா கேமிலாவை வீழ்த்தினார்.

# மழையால் கைவிடப்பட்டது இந்திய–அவுஸ்ரேலிய ஆட்டம்



(சிட்னி)

சிட்னியில் நேற்று நடை பெற்ற அவுஸ்ரேலிய-இந்திய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் போட்டி மழை காரண மாக கைவிடப்பட்டது முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்ரேலிய அணி களத்தடுப்பை தெரிவு செய்தது. எனினும் மழை காரணமாக போட்டி தொடங்குவதில் 40 நிமிடம் தாமதம் ஆனது.

பின்னர் ஆரம்பமான போட்டி யில் இந்திய அணிக்கு ரகானே, ஷிகர் தவான் ஜோடி தொடக்கம் கொடுத்தது. 16 பந்துகள் மட்டும் வீசப்பட்ட நிலையில் மீண்டும் மழை பெய்ததால் போட்டி நிறுத் தப்பட்டது.

மீண்டும் போட்டி தொடங் கியதும், '44 ஓவர்களாக குறைக் கப்பட்டது. ஷகர் தவான் 8 ரன்னுடன் அவுட்டானார். அவசர மாக ரன்கள் சேர்க்க ஆசைப் பட்ட அம்பதி ராயுடு, 23 ரன்கள் எடுத்தார். 16 ஓவரில் இந்திய அணி 2 விக்கெட் இழப்பிற்கு 69 ரன்கள் எடுத்த நிலையில் மறுபடியும் மழை குறுக்கிட்ட போது போட்டி நிறுத்தப்பட்டது.

ரகானே (28), கோஹ்லி (2) அவுட்டாகாமல் இருந்தனர் தொடர்ந்தும் மழை பெய்ததால் ஆட்டம் நிறுத்தப்பட்டு இரு அணிகளுக்கும் தலா 2 புள்ளி கள் வழங்கப்பட்டன

# மேற்கிந்தியாவிடம் 9 வருடங்களின் பின் வீழ்ந்தது தென்னாபிரிக்க அணி



(போர்ட்எலிசபெத்)

தென்னாபிரிக்கா - மேற்கிந் திய அணிகளுக்கிடையில் போர்ட் எலிசபெத்தில் நேற்று முன தினம் இடம்பெற்ற போட்டியில் மேற்கிந்திய அணி 1 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

தென்னாபிரிக்க அணிக்கெ திராக 9 வருடங்களின் பின்னர் பெற்ற வெற்றி இதுவென்பது சிறப்பானது. நாணயச் சுழற் சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய அணி, முதலில் துடுப்பெடுத் தாடும்படி தென்னாபிரிக்காவைப் பணித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னா பிரிக்க அணி, 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது.

சிறப்பாக துடுப்பெடுத்தாடிய டேவிட் மில்லர், 133 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள், 11 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 130 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்டார். மேற்கிந்திய அணியின் பந்து வீச்சாளர்கள் சார்பில் ஜசன் ஹோல்டர் 4 விக்கெட்டுகளையும் ஷெல்டன் கொட்ரல் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய மேற்கிந்திய அணியின் ஆரம்ப விக்கெட்டுகள் குறைந்த ஓட்டங்களுடன் சரிந்தபோதிலும் இடைநிலை வீரர்களின் நிதான மான துடுப்பாட்டம் காரணமாக 48.3 ஓவர்களில் 9 விக் கெட்டுகளை இழந்து, வெற்றி இலக்கை அடைந்தது (266 ஓட்டங்கள்). மார்லன் சாமுவெல் 68 ஓட்டங்களுடனும் டரென் சமி 51 ஓட்டங்களுடனும் ஆட்ட மிழந்தனர்.

நிதானமாக, தனிமனிதனாக துடுப்பெடுத்தாடிய அன்ரே ரஸ்ஸல், ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களைப் பெற்றார். இதில், 5 ஆறு ஓட்டங்களும் 5 நான்கு ஓட்டங்களும் உள்ளடங்கும். தென்னாபிரிக்க அணி சார்பில் போல் டுமினி, பர்ஹான் பிஹார் டீன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். போட்டியின் நாயகனாக அன்ரே ரஸ்ஸல் தெரிவு செய்யப்பட்டார். குறித்த வெற்றியின் மூலம், 5 போட்டிகள் கொண்ட தொடரின் நிலை 3 இற்கு 1 என்ற ரீதியில் தென்னாபிரிக்கா வசமிருக் கின்றமை குறிப்பிடத்தக்கது.

# வல்வை இளங்கதிர் உதைபந்து வெற்றி பெற்றது ரேவடி அணி



வல்வை இளங்கதிர் விளையாட்டுக்கழகம் வல்வை விளையாட்டுக் கழகத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையே நடாத்திய ஒரு நாள் உதைபந்தாட்டத் தொடரை வல்வை ரேவடி விளையாட்டுக் கழகம் கைப்பற்றிக் கொண்டது இத்தொடர் நேற்று முன்தினம் வல்வெட்டித்துறை தீருவில் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டித்தொடரில் வல்வை வி.கழகத்துக்குட்பட்ட அனைத்துக் கழகங்களும் பங்குபற்றியிருந்ததுடன் போட்டிகள் யாவும் விலகல் முறையில் அமைந்திருந்தன.

காலை 9.00 மணியளவில் ஆரம்பமான போட்டியின் முதற் சுற்றுப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு, நேதாஜி இ.வி.கழகம் எதிர் ரேவடி ஐ.இ.வி.கழகம் - 0 : 0 சமநிலைதவிர்ப்பு உதையில் ரேவடி ஐ.இ.வி.கழகம் வெற்றி. ஆட்டநாயகன் :- சி.தர்ஷன் ( நேதாஜி இ.வி.கழகம்) உதயசூரியன் கழகம் எதிர் இளங்கதிர் இ.வி.கழகம் - 2 : 2 சமநிலைதவிர்ப்பு உதையில் உதயசூரியன் கழகம் வெற்றி. ஆட்டநாயகன் :- பா.வசந்த் (உதயசூரியன் கழகம் ) தீருவில் இ.வி.கழகம் எதிர் ரெயின் போவி.கழகம் - 3 : 0 கணக்கில் தீருவில் இ.வி.கழகம் வெற்றி.

ஆட்டநாயகன் :- மதன் (தீருவில் இ.வி.கழகம்) முதல் அரையிறுதிப் போட்டியில் வல்வை உதயசூரியன் கழகத்தை எதிர்த்து வல்வை ரேவடி ஐக்கிய இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதியது. விறு விறுப்பான ஆட்டநேர முடிவில் ரேவடி ஐ.இ.வி.கழகம் 2 : 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது ஆட்ட நாயகன் :- நந்தகுமார் (ரேவடி ஐ.இ. வி.கழகம்)

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டநேர முடிவில் தீருவில் இ.வி.கழகம் 2 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. ஆட்டநாயகன் :- சண்முகதாஸ் (தீருவில் இ.வி.கழகம்)

இவ் ஒருநாள் தொடரின் இறுதிப் போட்டியானது சிறிது நேர இடைவெளியின் பின் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் தீருவில் வி.கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை ரேவடி ஐக்கிய இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதியது. போட்டியின் ஆரம்பம் முதல் விறுவிறுப்பாக நடந்து முடிந்த போட்டியின் முடிவில் ரேவடி ஐ.இ.வி.கழகம் 3 : 1 என்ற கோல் அடிப்படையில் தீருவில் இ.வி.கழகத்தை வெற்றி கொண்டது.

இளங்கதிர் இ.வி.கழக ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டியில் வெற்றியீட்டிய ரேவதி அணிக்கு வெற்றிக்கிண்ணம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டது. இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக சீலன் ( ரேவடி ஐ.இ.வி.கழகம் ) தொடர் ஆட்ட நாயகனாக நந்தகுமார் ( ரேவடி ஐ.இ.வி.கழகம்) அவர்களும் தெரிவாகினர்.

# இலங்கை அணியின் தயார்நிலை மகிழ்வை பறிகொடுத்த சனத்



உலகக்கிண்ண போட்டிகளுக்கு இலங்கை அணியை தயார் செய்வதில் மகிழ்ச்சி இல்லை என தெரிவுக் குழுத் தலைவர் சனத் ஜெயசூரிய கவலை தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு சில தினங்களே உள்ளன. இதற்கு முன்னதாக இலங்கை அணி நியூசிலாந்து சுற்றுப் பயணம் செய்து அந்த அணியுடன் 7 ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகிறது.

இந்தத் தொடரில் ஒரு போட்டியில் மட்டும் வெற்றி பெற்ற இலங்கை அணி 1-4 என்ற கணக்கில் தொடரை இழந்துள்ளது.

இந்நிலையில் இலங்கை அணி குறித்து சனத் ஜெயசூரியா கவலை தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவர் கூறுகையில், நியூசிலாந்தில் இலங்கை அணியின் செயற்பாடால் நான் 100 சதவீதம் மகிழ்ச்சி இல்லாமல் இருக்கிறேன். சில வாரங்களில் அணியில் முன்னேற்றத்தைக் கொண்டு வர வேண்டும்.

ஒரே ஒரு நல்ல விடயம் என்னவென்றால் நியூசிலாந்து அணிக்கு எதிராக தற்போது விளையாடிக் கொண்டிருப்பது. அந்த அணியை நியூசிலாந்தில் எதிர்கொள்ள எளிதாக இருக்கும்.

அதே போல உலகக்கிண்ணத் தொடரில் தொடக்க போட்டியையும் எளிதாகக் கையாள முடியும் என்று கூறியுள்ளார்.

விளையாட்டுச் செய்திகள்

# விக்ரம்,இராஜன் கங்கு கிரிக்கெட் முதல் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் வெற்றி



விக்ரம்- இராஜன்- கங்கு ஞாபகார்த்தமாக கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையம் வருடா வருடம் நடாத்தும் துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் முதல் ஆட்டத்தில் கே.சி.சி.சி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய ஜொலி ஸ்டார் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது. இச்சுற்றுப்போட்டி கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை காலை நடைபெற்றது.

கே.சி.சி.சி விளையாட்டுக் கழகம், ஜொலி ஸ்டார் விளையாட்டுக் கழகம், சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம், யாழ் பல்கலைக்கழக அணி ஆகிய நான்கு அணிகளை உள்ளடக்கி 30 ஓவர்களைக் கொண்டு இந்த துடுப்பாட்ட சுற்றுப் போட்டி இடம்பெறுகின்றது.

இந்த முதல் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஜொலிஸ்ரார் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதற்கு அமைவாக முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி அணி 25.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அனோஜன் 26 ஓட்டங்களையும், உமாநாத் 24 ஓட்டங்களையும், யனுதாஸ் 18 ஓட்டங்களையும், பார்த்தீபன் 15 ஓட்டங்களையும், வல்லவகுமாரன் 14 ஓட்டங்களையும் கே.சி.சி.சி அணிக்குப் பெற்றுக் கொடுத்தனர். ஜொலி ஸ்டார் அணி சார்பாக மதுஷன் 6 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டுகளையும், அருண் 3 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களை வழங்கி 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 156 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஜொலி ஸ்டார் அணி 28.1 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் மதுசன் 41 ஓட்டங்களையும், மணிவண்ணன் 24 ஓட்டங்களையும், பகீரதன் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும், உமாதரன் 14 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

கே.சி.சி.சி அணி சார்பாக பவிதரன் 6 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்கள் வழங்கி இரண்டு விக்கெட்டுக்களையும், சாம்பவன் 6 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்கள் வழங்கி 2 விக்கெட்டுக்களையும், யனுதாஸ் 4 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்கள் வழங்கி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் வெற்றி வாய்பு கே.சி.சி.சி அணி பக்கம் இருந்தபோதும் ஆட்டத்தின் இறுதி நேரத்தில் கே.சி.சி.சி அணியினரின் முறை தவறிய பந்து வீச்சு, அகலப்பந்து வீச்சுக்கள் மற்றும் தவறவிடப் பட்ட பிடிகள் என்பனவற்றால் வெற்றி வாய்ப்பு ஜொலிஸ்ரார் அணிக்கு மாறியதைத் தொடர்ந்து ஜொலி ஸ்டார் அணி துடுப்பாட்ட வீரர்கள் சிறந்த முறையில் அதனைப் பயன்படுத்தி அணியினை வெற்றி பெறச்செய்தனர்.

# விளையாட்டுக் கழக வீரர்கள் நிரந்தர வருமானம் பெறத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் முன்னேற்றக் கழகத்தின் வன்னி விஜயத்தின் போது, வவுனியா ஜங்ஸ்டார்ஸ் விளையாட்டுக் கழகம் த.மு.க குழுவினரை அழைத்து தமது கழகத்தில் சந்திப்பை மேற்கொண்டனர்.

கடந்த நான்கு வருடங்களாக தமிழர் முன்னேற்றக் கழகத்தின் பிரதம அமைப்பாளர் ஜனகன் ஜனனம் அறக்கட்டளை ஊடாக ஜங்ஸ்டார்ஸ் விளையாட்டுக் கழகத்தின் மின்னொளி கால்பந்தாட்ட போட்டிகள் அடங்கலான விளையாட்டு நிகழ்வுகளுக்கு முழுமையான கிண்ணங்களை வழங்கிவருகின்றார்.

அதற்கு நன்றி கூறும் முகமாக இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். விளையாட்டில் பங்கெடுப்பதனால் எமது கழகத்தின் இளையவர்கள் வேலை வாய்ப்புக்கள் இன்றி தமது வாழ்வை இழந்து விடக் கூடாது.

எனவே கழகத்தில் உள்ள படித்த இளையவர்களுக்கு வேலை வாய்ப்புகளை பெற்று தருமாறு கழகத்தின் தலைவர் ராஜன் கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனகன், விமல் இந்த விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்தவர். அவர் மூலம் நாம் எம்மாலான



பங்கினை செய்துள்ளோம். இது தொடரும். நீங்கள் அனைவரும் இளையவர்கள். சமூகத்திற்கு நிறையச் செய்ய வேண்டும்.

எனவே உங்களுக்கு நாம் நிரந்தர வருமானம் கிடைக்கும் வகையில் ஏற்பாடுகளைச் செய்து தருகின்றோம். அதன் மூலம் வேலை வாய்ப்புகளும் கிடைக்கும்.

விளையாட்டு வீரர்களே நல்ல தலைமைத்துவ பண்புடையவர்களாக நல்ல சேவை ஆற்றுவார்கள். எனவே நீங்களும் தமிழர் முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து நல்ல திட்டங்களில் கை கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

(11)



**அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு, கல்லூரி மாணவர்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான 10 கிலோ மீற்றர் தூர வீதி ஓட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது. இந்தப் போட்டியில் கலந்து கொண்டு முதல் மூன்று இடங்களையும் முறையே ர.கண்ணன், கி.ஜெயதாஸ், ஆ.குபீகரன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இப் போட்டியில் நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.**

# அறிவிற்கெதிரான அதிகாரம் - கலகம்

- சுகு-ஸ்ரீதரன் -



வரலாற்றை நவீன உலகில் தொல்லியல் மற்றும் மானிடவியல் மற்றும் இலக்கியங்கள், மரபார்ந்த பழக்கவழக்கங்கள் மற்றும் பண்பாடுகளிலிருந்தும் இவற்றை விஞ்ஞான ரீதியான விசாரணைக்கு உட்படுத்தி பதிய முற்படுகிறார்கள்.

ஆர்தர் சி கிளார்க், ஐசாக் அசிமோவ் போன்றவர்கள் ஆர்வக் கிளர்ச்சி ஏற்படுத்தும் புனைவுகளைத் தந்தார்கள்.

இரண்டு சூரியன்கள் நிலவும் கிரகம் கண்டு பிடிக்கப்பட்டபோது அது ஆர்தர் சி கிளார்க்கின் புனைவொன்றை ஒத்திருந்தது.

தென்னிந்திய இலங்கை வரலாற்று ஆய்வுகளை ஐராவதம் மகாதேவன், நாகசாமி, இந்திரபாலா, சேனக பண்டாரநாயக்க, செரான் தெரணியகல, ரகுபதி போன்றவர்கள் பிரதானமாக தொல்பொருளியல் மற்றும் மானிடவியல் தகவல்களைக் கொண்டு திராவிட மற்றும் இலங்கை சமூகங்களின் உருவாக்கம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டார்கள்.

தற்போது டி.என்.ஏ - பரம்பரை இயல் தகவல்கள் மூலம் மக்கள் சமூகங்களின் பூர்வீகங்களை அறிய முயற்சிக்கின்றனர்.

இன்னும் சொற்ப காலத்தில் இது மிக எளிதாகி விடும்.

இலங்கையின் பாம்புகள் என்று சொல்லப்படும் பறக்கும் பாம்புகள் ஆந்திர பிரதேச சேச்சாலம் வன உயிரியல் பகுதியல் காணப்படுவதாக கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. 17000 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நிலப்பகுதிகள் இணைந்திருந்ததற்கான ஆதாரமாக இதனையும் கொள்ள முனைகிறார்கள்.

பனை, பூவரசு, கிழுவை வேலி, கரிக் குருவி, குடுமி, கடுக்கன், கோவில் 14ஆம் திருவிழாவின் அடுத்தநாள் கறி, பனந்தென்னங்கள் இரசனை, வீட்டுச் சாரயம், மருமகனின் பூவரசு சீர்வரிசை பற்றிய மாமனாரின் நக்கல், தொண்டு பட்டி நேர்த்தி, கோயிலில் சாமி தூக்குவதற்கான பரம்பரை உரிமை, சாதி அமைப்பு, உயரத்திலிருக்கும் அர்த்த நாரீசுவரரும் காட்டில் படுத்திருக்கும் பாவத்தம்மாளும், வெவ்வேறு பூசாரிகளும் படையலும் ஈழத்தமிழர்களின் வாழ்வில் - குறிப்பாக தமிழக திருச்செங்கோடு பிரித்தானிய ஆட்சிக் கால வாழ்வு குறிப்பாக யாழ் தீவுப் பகுதி வடமராட்சி மற்றும் தென்மராட்சி வலிகாம வாழ்வில் இருந்ததை தற்போதும் எச்ச சொச்சமாக இருப்பதை ஒத்ததாக காணப்படுகிறது.

திருச்செங்கோட்டின் 300 ஆண்டுகளுக்கு முந்திய சாயல் இங்கும் சிதறுண்டு காணப்படுகிறது.

பெருமாள் முருகன் இந்த தொப்புள் கொடி உறவை திட்டமெதுவும் இல்லாமல் அநாயாசமாக மாதொருபாகனில் பதிகிறார்.

எஸ்.பொ., டானியல் போன்றோரின் நாவல்களில் சிறுகதைகளில் கூட யாழ் மரபுகள் என்று சொல்ல பட்டவற்றை மீறிய விதி மீறல்கள் "களவொழுக்கங்கள்" பற்றிய கதைகள் விரவிக் கிடக்கும்.

கொச்சையான வக்கிரமான எண்ணங்களுடன் பார்ப்பவர்களுக்கு பெண்ணை எப்போதும் சந்தேக கண்ணினூடாக பார்க்கும் சாதி உட்பட அத்தனை அடிமைத்தனங்களையும் தலையிலேற்றிய ஆதிக்க சக்திகளுக்கு இது நிம்மதியைக் குலைக்கும் பிரச்சினை.

தமிழகத்தில் கருத்துச் சுதந்திரத்திற்கெதிரான நோய் எபோலா போல் தீவிரமாக பரவி வருகிறது.

அது மத - தீண்டாமை வகைப்பட்டது மாத்திரமல்ல. யாழ்மையவாத தமிழ்த்தேசிய வெறியின் செல்வாக்கிற்கு உட்பட்ட வெறுப்புணர்வினூடாகவும் பரவியுள்ளது.

டாம் மற்றும் பிரசன்ன விதானகேயின் திரைப்படம் இவை போன்ற இதரவற்றின் மீதான விரோதப் போக்குகள் போன்று பல.

இவை எல்லாம் சேர்ந்து பகுத்தறிவு, சுதந்திர முற்போக்கு எண்ணங்களின் களமான தமிழகத்தை அண்மைக்காலமாக மாசுபடுத்தி வருகிறது.

இந்த சுதந்திரத்திற்கெதிரான தாக்குதல்களுக்கெதிராக தீவிரமாகச் செயற்படவேண்டிய காலம் வந்து விட்டது.

துரோகிகள் என்று தூற்றுவோரும் இந்த கலாசார காவலர்களும் ஒன்றே. இவர்கள் அனேகமாக பாசிச வாதிகளாக இருப்பார்கள்.

ஈழத்து அரசியலின் இன்றைய கனவான்கள் அதிகாரவர்க்கமும் அனேகமாக இந்த பாசிச சிந்தனைப் போக்கு கொண்டதே.

தமிழகம் காந்திய சுதந்திர இயக்கம், இடதுசாரி முற்போக்கு மற்றும் திராவிட சீர்திருத்த இயக்க செழுமைகளுள் வளர்ந்தது.

அதன் அறங்கள் சமூக விழுமியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

அது உலகளாவிய தமிழர்களின் ஜனநாயக இருப்பிற்கும் அறிவு பூர்வமாக முன் செல்லுதலுக்கும் அவசியமானது.

அறஞ் சார் இலக்கியவாதிகள் பிரக்ஞையுடனோ அல்லாமலோ அறிவியல் வரலாறு மானிடவியல் பங்களிப்புக்களை வழங்குகிறார்கள். மற்றும் சமூக அதிர்வுகளை ஏற்படுத்துகிறார்கள்.

இந்தப் பதிவு- நாவல் பலநூறு கட்டுரைகளை விட வலுமிக்கது.

# பை பை MSD

- சித்தார்த்தா வைத்தியநாதன் -

எம்.எஸ். தோனி டெஸ்ட் பந்தயங்களிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். இதில் ஆச்சரியப்பட பல காரணங்கள் உண்டு. ஒருதொடரின் மத்தியில் அவர் இந்த முடிவை எடுத்துள்ளார். தன் கடைசி ஆட்டத்துக்கு பின்னால் நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் அவர் இதைப் பற்றி மூச்சுக் கூட விடவில்லை. மைதானத்தைச் சுற்றிய சம்பிரதாயமான ஓட்டமோ (lap of honour), சொற்பொழிவோ, கண்ணீர் மல்கிய விடைபெறுதலோ இருக்கவில்லை. செய்தியாளர்களுக்கென விடுவிக்கப்பட்ட ஒரு அறிவிப்பு மட்டுமே.

இந்த முடிவின் தருணம் மற்றும் காரணங்களைப் பற்றி நாம் விவாதிக்கலாம். அவரது உடல் சோர்ந்து விட்டதா அல்லது அவரது மனதுக்குப் போதும் என்றாகி விட்டதா? எப்படியிருந்தாலும் நமக்கு அது தெரியப் போவதில்லை. தோனி விரிவான விளக்கங்கள் கொடுப்பவரல்ல. அதற்கான அவசியம் அவருக்கு எப்போதும் இருந்ததில்லை.

தோனியின் டெஸ்ட் வாழ்க்கை ஒன்பது வருடங்கள் நீடித்தன. டிராவிட், லக்ஷ்மன் இவர்களுடன் ஒப்பிடுகையில் இது சற்றே விசித்திரமாகத் தோன்றலாம். இவர்கள் இருவரும் டெஸ்ட் பந்தயங்களில் ஒன்றரை தசாப்தங்கள் வரை நீடித்தனர்.. கும்ப்ளே 18 வருடங்களும், கங்குலி 12 வருடங்களும் டெஸ்ட் பந்தயங்களில் விளையாடினர். (டெண்டுல்கர் மிகக் குறைந்த வயதிலேயே விளையாட ஆரம்பித்ததினால் அவரை ஒரு விலக்காகக் கருத வேண்டும்).

இருப்பினும் மேற்சொன்னவர்களில் எவருக்குமே தோனி சமாளித்த அளவிலான நெருக்கடியான ஆட்ட அட்டவணை இருக்கவில்லை. டெஸ்ட் பந்தயங்கள், சர்வதேச ஓருநாள் பந்தயங்கள், T20 விளையாட்டுக்கள், ஐ.பி.எல். மற்றும் சம்பியன் லீக் பந்தயங்கள் என அவரது ஓடு பொறி (tread mill) நிற்காமல் ஓடிக் கொண்டிருந்தது. தோனியும் எளிதில் தளர்பவரல்ல. அவரது வெற்றிகளையும், ஓட்ட எண்ணிக்கைகளையும், சராசரி ரன்களையும் மீறி அவர் இத்தகைய கடுமையான வேலைப் பளுவை சமாளித்ததையே ஒரு பெரிய சாதனையாகக் கருத வேண்டும்.

இந்தியாவுக்கு மிக அதிகமான வெற்றிகளைப் பெற்ற அணித்தலைவர் என்றபோதிலும், ஒருநாள் பந்தயங்களிலும் T20 விளையாட்டுகளிலும் இவர் விளையாடிய அபாரமான இன்னிங்ஸ்கள்தான் இவரது சூப்பர்ஸ்டார் அந்தஸ்துக்கான அடித்தளங்கள். ராகுல் டிராவிட் பரிந்துரைத்துள்ளதுபோல், டெஸ்ட்களிலிருந்து ஓய்வெடுத்துள்ளது தோனியின் ஒருநாள் பந்தய / T20 பந்தய பங்கெடுப்பை நீட்டிக்க உதவலாம். அது கிரிக்கெட்டின் குறுகிய வடிவத்தின் மிகச்சிறந்த விளையாட்டு வீரர்களில் ஒருவராக அவர் நினைவில் நிற்க வழிவகுக்கலாம்.

இந்திய அணியின் தலைமைப் பதவிக்கு முன்பாக அவர் எந்த உள்ளூர் அணியின் தலைவராகவும் இருந்ததில்லை. இந்திய அணியின் தலைவராவது பற்றி கனவில்கூட நினைத்ததில்லை என அவரே சொல்லியிருக்கிறார்.

ஜார்கண்டின் ஏதோ ஒரு கோடியிலிருந்து வந்த ஒரு ஆட்டக்காரர் 90 டெஸ்ட்கள் விளையாடும் சாத்தியம் எப்படி இருந்திருக்கும்? அணியில் சேர்ந்த ஆரம்ப நாட்களில், பயிற்சியாளர்கள் அவரது துடுப்பாட்டத்தின் அணுகுமுறையை மாற்றிக்கொள்ளும்படி கூறியபடியே இருந்தனர். "அதிகமாய் காட்டடி வேண்டாம்", "ஆட்டஉத்தியை மாற்றிக்கொள்", "ஸ்பின்னர்களின் பந்துகளை உயர்த்தி அடிக்காதே" போன்ற அறிவுரைகள் அவரைத் தொடர்ந்து தாக்கின. அவர் வழியில் தொடர்ந்து ஆடினால் ஆட்டத்தின் நீண்ட வடிவத்தில் அவர் பெயரெடுக்க இயலாது என்று பலரும் அவரிடம் சொன்னார்கள். ஆனால் தோனி உறுதிகுலையவில்லை.

தோனி டெஸ்ட்களில் 4876 ரன்கள் எடுத்தார். இவற்றில் 6 செஞ்சுரிகள், 33 ஐம்பதுகள். அவரது 224, விக்கெட்கீப்பர்களிடையே மூன்றாவது சிறந்த ஸ்கோர். விக்கெட் கீப்பிங்கால் சாதித்தது 256 பிடிகளும் 38 ஸ்டம்பிங்குகளும்.

தோனி தனது முதல் வகுப்பு ஆட்டத்தை 1999 - 2000 இல் ஆரம்பித்தார். 2004 வரை அவர் பெரிதாக முத்திரை பதிக்கவில்லை. 6 வருடங்கள் வரை, என்றாவது கவனிக்கப்படுவோம் என்ற நம்பிக்கையில் ஆடிக்கொண்டு, ஸ்கோர்கார்ட்களில் வெறும் பெயர்களாய், அங்கும் இங்கும் ரயில்களில் பயணித்து, விளையாடி, வியர்வை சிந்தி, பயிற்சி செய்யும் பல்லாயிரக்கணக்கான கிரிக்கெட் ஆட்டக்காரர்களில் ஒருவராக இருந்தார்.



அணியோ அல்லது மாகாணமோ மாறிச் சென்று வாய்ப்புகள் தேட நினைக்கவில்லை. இது பற்றி, சிற்றூர்களில் கிரிக்கெட் ஆடும் ஒரு மொத்தத் தலைமுறை இளைஞர்களும் ஊக்கம் கொள்ளுமாறு அவர் பின்னர் சொன்னது : "என்னிடம் போதிய திறமை இருந்தால் வாய்ப்புக் கிடைக்கும் என்று எனக்குத் தெரியும்"

இதுதான் ஆட்டத்திற்கும், நாட்டின் இளைஞர்களின் நம்பிக்கைக்கும் அவர் விட்டுச் செல்லும் மகத்தான கொடை.

ஜெர்மனியின் புடக்லாவில் உள்ள, "கல்லிவர் உலகத்தில்" இந்த கல்லிவரின் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. இது 36 மீட்டர் நீளமும் 17 மீற்றர் அகலமும் கொண்டது. ஐரோப்பாவின் மிகப்பெரிய சிற்பங்களில் இதுவும் ஒன்று.

ஜோனதன் ஸ்விப்ட் எழுதிய Gulliver's Travels பயணக்கதை 4 பாகங்களைக் கொண்டது. 1726 இல் வெளிவந்தது.

முதல்பாகம் 1699 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் திகதி முதல் 1702 ஆம் ஆண்டு 13 ஏப்ரல் வரை நடந்ததாகும்.

இரண்டாவது பாகம் 1702 ஆம் ஆண்டு ஜூன் 20ஆம் திகதியிலிருந்து 1706 ஆம் ஆண்டு ஜூன் 3 ஆம் தேதி வரை நடந்ததாகும்.



# கல்லிவர் சிற்பங்கள்

மூன்றாவது பாகம் 1706 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 3ஆம் திகதியிலிருந்து 1710 ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் தேதி வரை நடந்தது.

நான்காவது பாகம். 1706 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 7 ஆம் திகதி முதல் 1716 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதிவரை நடந்ததாகும்.

அனைத்தும் கற்பனைதான் என்றாலும், தத்ரூபமாய் இருந்ததால் இளைஞர் முதல் வயதானவர்கள் வரை அனைவரையும் கவர்ந்தது. ஒவ்வொரு பாகத்திலும் ஒரு தனிச் சிறப்பு உண்டு.

முதல் பயணத்தில் கல்லிவர் 6 அங்குலம் உயரமே கொண்ட மனிதர்களைச் சந்திப்பார்.

இரண்டாவது பயணத்தில் ராட்சச மனிதர்களை சந்திப்பார். கல்லிவர் சந்திக்கும் முதல்நபர் 72 அடி உயரம் இருப்பார். இந்த மனிதர் ஒரு காலை எடுத்து வைத்தால் அது 9.1 மீற்றர் நீளம் கொண்டதாக இருக்கும்.

மூன்றாவது பயணத்தில், 80 வயதைக் கடந்து வாழ்ந்தும் வாழாமல் இருக்கும் நூதன மனிதர்களைச் சந்திக்கிறார்.


நாலாவது பயணத்திலே குதிரைகள் ஆட்சி செய்கின்றன.

இந்தரீதியில் கற்பனைக் குதிரை தட்டிவிடப்பட்டு, எதிர்பாராத திருப்பங்களுடன் பயணம் நடந்ததால் அனைவராலும் விரும்பப்பட்டது.

பலன் உலகம் முழுவதும் குறிப்பாக ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் அமைக்கப்படும் அனைத்து குழந்தைகள் வேடிக்கை பூங்காக்களிலும் கல்லிவருக்கு நிச்சயம் ஓர் இடம் உண்டு.

அமெரிக்காவில் கொலம்பியா மாவட்டத்தில் மெரிலாந்து பகுதியில் அமைந்துள்ள குழந்தைகள் பூங்காவில் வித்தியாசமான கல்லிவரை காணலாம். தலை, கை, கால்களைத் தவிர மற்றதெல்லாம் பூமிக்குள் புதைந்திருக்கும். கை கால்களை உதறிக் கொண்டு எழமுயல்வது போல் இந்த கல்லிவர் சிற்பம் அமைந்துள்ளது தனிச்சிறப்பு.

இதேபோன்று, பிரான்ஸ் எவர்சிலெஸ் பகுதி குழந்தைகள் பூங்காவிலும் சிற்பத்தை காணலாம்.



1959ஆம் ஆண்டு கியூபா புரட்சி ∴பிடெல் கஸ்ட்ரோ தலைமையில் வெற்றி பெற்றது. தனது தாழ்வாரத்தில் நடந்த அந்த சோஷலிசப் புரட்சியை சகித்துக் கொள்ளாத அமெரிக்கா 1962 ஆம் ஆண்டு முதல் அந்தச் சின்னஞ்சிறிய நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதித்தது.

# அமெரிக்காவின் கியூபக் கொள்கை முற்றுமுழுதான தோல்வி!

அந்தப் பொருளாதாரத் தடையால் அந்த நாட்டின் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவது குறித்து பெரிதாக ஜனநாயகம் பேசி வரும் அமெரிக்காவின் எந்தவொரு ஜனாதிபதியும் கவலைப் படவில்லை.


ஆனால் அமெரிக்காவின் இந்தக் கொடுமையான பழிவாங்கலைத் தாங்கிக்கொண்டு தமது தாய்நாட்டின் சுதந்திரத்தை விட்டுக்கொடுக்காது கியூபா மக்கள் தமது சோஷலிசப் பாதையில் தொடர்ந்து முன்னேறி வந்தனர்.

இறுதியில் அமெரிக்காவின் 54 வருட கியூபக் கொள்கை தோல்வி கண்டுவிட்டது என்பதை அமெரிக்க அதிபர் ஒபாமா அண்மையில் ஏற்றுக் கொண்டுள்ளார்.

அதன் அடிப்படையில் கியூபாவின் சோஷலிச அரசாங்கத்துடன் முழு அளவிலான இராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்த அமெரிக்கா தீர்மானித்துள்ளது. பொருளாதாரத் தடையையும் நீக்குவது பற்றி ஒபாமா அரசு பரிசீலித்து வருகிறது.

நீதியான இலட்சியங்கள் ஒருபோதும் தோற்றுப் போவதில்லை என்பதற்கு கியூபா ஒரு மாபெரும் உதாரணமாக உலக அரங்கில் எழுந்து நிற்கிறது.

**(நன்றி: வானவில் 49)**



# "அரசே தீர்வை வை!" என்னுமொரு திருகுதாளம்!

வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

பிச்சைக்காரன் புண்ணைக் காட்டிக் காட்டியே சீவிக்கிறதைப் போலத்தான் எங்கடை தமிழரசு அரசியலும். சனங்களுக்கு இருக்கிற அல்லாட்டில் இல்லாத ஏதோ பிரச்சினையைச் சொல்லியே வாக்குக் கேக்கிறதும், வெண்டதுக்குப் பிறகு அதுக்காக ஏதோ செய்யிற மாதிரிக் காட்டிறதும், பிறகு ஒண்டுமே இல்லாமல் கைவிட்டு விட்டு அடுத்த எலெக்சனிலை புலம்பிறதும் சினிமாப் படக் கதையள் மாதிரி திரும்பத் திரும்ப வந்து கொண்டிருக்குது பாருங்கோ.

இப்ப மைத்திரி அரசாங்கத்தின்ரை தேர்தல் விஞ்ஞாபனத்தை சுமந்திரனும் சேர்ந்து தயாரிச்சுக் குடுத்திருக்கிறார். நிறைவேற்றுக் குழுவிலை சம்பந்தன் இருக்கிறார். மற்றப் பக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ரை பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தமிழ் மக்களின்ரை பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேணும் எண்டு கேட்டிருக்கிறார்.

பழைய குருடி கதவைத் திறந்தாளாம் நிலை ஆரம்பிச்சிட்டுது. பிரச்சினை ஆருக்கு எண்டதுதான் இப்ப கேள்வி. வருத்தம் இருக்கிறவன் டாக்குத்தரிட்டை போய் என்ரை வருத்தத்தைக் கண்டு பிடிச்சு மருந்து தாரும் எண்டு கேக்கிற மாதிரித்தான் இதுவும்.

1976 இலை தமிழீழத்துக்குச் சனத்திட்டை ஆணை கேட்டவை. சனங்களும் சரி எண்டு தலையசைச்சு வாக்களிச்சினை. அதுக்குப் பிறகு கொஞ்சம் உசுப்பேத்தல்கள் நடந்துது. பிறகு அதைப் பற்றி ஒண்டுமே கதைக்கேல்லை. இரத்தத் திலகம் வச்ச பெடியளுக்குத்தான் ஏமாற்றம். அவங்கள் இவையளை ஓரங் கட்டீட்டு தாங்களாகவே வெளியிலை வந்து அடுத்த கட்டத்தைக் கொண்டு போனாங்கள்.

சனங்களிட்டை தமிழீழம் கேட்ட கட்சி. தமிழரசுக் கட்சியெண்டு தமிழிலையும், சமஷ்டிக் கட்சியெண்டு ஆங்கிலத்திலையும் பெயரை வச்சிருக்கிற கட்சி. காலங்காலமாக தமிழற்றை பிரச்சினையைச் சொல்லியே உயிர் வாழுற கட்சி. தன்ரை பிரச்சினைக்கு இப்பிடியான தீர்வைத்தான் எதிர்பார்க்கிறம் எண்டு சொல்லுறதுதானே பொருத்தம்!

அதை விட்டிட்டு நீங்கள் தீர்வு தாங்கோ எண்டு அரசாங்கத்தைக் கேக்கிறது எந்த வகையில நியாயம்? தமிழரசு மொழியிலை கூறுறதெண்டால் எந்தச் சிங்கள அரசாங்கங்களும் எங்களுக்கான உருப்படியான தீர்வைத் தரும் எண்டு எதிர்பார்க்கலாமா?

ஜீ.ஜீ.பொன்னம்பலம் 50இற்கு 50 கேட்டுப் பார்த்தார். செல்வநாயகம் பண்டாரநாயக்கவுடனும், டட்லி சேனநாயக்கவுடனும் ஒப்பந்தம் செய்து பார்த்தார். அதுக்குப் பிறகு ஆயுத மோதல்களுக்குப் பின்னாலை இந்தியா தலையிட்டு ஒப்பந்தம் செய்து மாகாண சபையை உருவாக்கிச்சுது. அந்தப் புண்ணியத்திலை கிடைச்ச கோட்டையை - அதுதான் மாகாண சபையை - இப்ப தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியிருக்குது. இப்பத்தை அரசாங்கத்தோடை தலைவர்கள் தேனிலவு கொண்டாடிக் கொண்டிருக்கினை.

இந்த நேரத்திலை தீர்வை முன் வையுங்கோ எண்டு கேக்கிறதெண்டால் இது சனங்களுக்கு அடிக்கிற கண்ணீர் புகைக்குண்டுதான் பாருங்கோ.

கூட்டமைப்பு மைத்திரியை ஆதரிக்கிறதும் சனங்களின்ரை ஆணைதானாம். அப்பிடியெண்டால் சனங்களோடை கதைச்சுப் பேசி தீர்வுத் திட்டம் குறிச்சு ஒரு முடிவெடுக்கப் போறம் எண்டு முந்திச் சொன்னவை. அது காத்தோடை போட்டுது போலை கிடக்குது.

சரி. உங்களுக்கு எப்பிடியான தீர்வு வேணும்? தமிழீழம் வேணுமா? மாநில சுயாட்சி வேணுமா? இல்லாட்டில் பொலிசு மற்றும் காணி அதிகாரத்தோடை மாகாண சபையைத் தந்தால் காணுமா?


என்னதான் வேணும்? எண்டு ஒரு படத்திலை கடைக்காரர் கேக்க வடிவேல் எண்ணதான் வேணும் எண்டு சொன்ன மாதிரி திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறதாலை என்ன புண்ணியம் கிடைக்கும் சுரேஸ் ஐயா?

அரசாங்கம் உங்களை விட 74 வீதமான சிங்கள மக்களின்ரை அபிலாஷையைப் புறந் தள்ளேலாது எண்ட யதார்த்தத்தை லேசா சனங்களிட்டை மறைச்சு வச்சிருக்கிறீங்களே! அந்த அபிலாஷையள்தான் பண்டாரநாயக்கவையும், டட்லியையும் ஒப்பந்தங்களைக் கிழிக்க வச்சது.

இப்ப வடக்கிலையிருந்து முழுமையாகப் படைகள் விலக வேணும் எண்டிறியள். படைகள் விலகாது எண்டு ஜனாதிபதி சொல்லுகிறார். நீங்கள் இங்கை சொல்லுகிற ஒவ்வொரு திறில் கதையளுக்கும் அங்கை மகாநாயக்க தேரோக்களுக்கும், சனங்களுக்கும் அவை மறுத்தான் விட வேண்டிக் கிடக்குது. நுணலும் தன் வாயால் கெட்ட கதையே உங்கடை கதை பாருங்கோ கூட்டமைப்பாரே!

மற்றவையிலை பொறுத்தி விழுத்திறதை விட்டிட்டு நியாயமான தீர்வுக்கான கோரிக்கையை நீங்கள் முன்வையுங்கோ பாப்பம். அப்புக்காத்துக் கூட்டமைப்பு இவ்வளவு கால அனுபவத்திலை சனங்களுக்கு ஏதாவது தீர்வைக் கேட்டிருக்குதா? அமரர் தொண்டமான் கூட தீர்வுத் திட்டத்தை முன் வச்சார். நீங்கள் வைக்கேல்லையே! ஏன்? ஏனெண்டால் உங்களிட்டை தீர்வுக்கான உருப்படிக் கோரிக்கை ஏதும் இல்லை. இருந்தாலும் அதை முன்வச்சால் பிறகு சனங்களிட்டை பிச்சை எடுக்கேலாது.

மகா சனங்களே! நாக்குப் புடுங்கிற மாதிரி இவையைப் பார்த்து நாலு வார்த்தை கேட்டாலன்றி இவையள் இந்தச் செக்கிலைதான் சுத்தி வருவினை. நீங்களும் எலெக்சன் திருவிழாவிலை ஒரே படத்தைத்தான் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டிருப்பியள்.






# மாங்காய் திருடன்

மாந்தோப்பிற்கும் அந்தப் பள்ளிக் கூடத்திற்கும் இடையே 100மீற்றர் தூரம் கூட இருக்காது.

அந்தச் சுற்றுவட்டாரத்திலுள்ள குக் கிராமங்களில் இருந்து நிறைய மாண வர்கள் அந்த உயர்நிலைப் பள்ளி யில் படிக்க வருவார்கள்.

கேசவன் ஏழாம் வகுப்பு படிக்கும் மாணவன், அவன் புழுதிப்பட்டி என்ற குக்கிராமத்திலிருந்து தினமும் அப் பள்ளிக்கு நடந்தே வருவான். அவன் முரட்டு குணமுடையவன் என்பதால் அவனுடன் சேர்ந்து பள்ளிக்கு வர பல மாணவர்கள் அஞ்சுவார்கள்.

காலை 8.00மணிக்கெல்லாம் கேசவன் வீட்டிலிருந்து பள்ளிக்குப் புறப்பட்டு விடுவான். பள்ளிக்கூடத் திற்கு வரும் சரளைப் பாதையின் இருபுறமும் புளியமரங்களும், ஆல மரங்களும், மஞ்சனத்தி மரங்களும் இடையிடையே வேப்பமரங்களும் இருந்தன. பள்ளியில் மதியஉணவு வாங்குவதற்காக பைக்குள் வைத்தி ருக்கும் சாப்பாட்டுத்தட்டில் தாளம் போட்டுக்கொண்டே வருவான். கேச வன். பறவைகளின் கீச்கீச் ஒலி அவன செவிகளை மயங்க வைக்கும்.

வழியில் இலந்தைப்பழமோ, சூரம் பழமோ கொடிகளில் பழுத்திருந்தால் கொடியைக் கம்பால் அடித்துக்கீழே விழும் பழங்களைப் பொறுக்கிப் பைக்குள் போட்டுக்கொண்டு பள்ளிக்குச் செல்வான்.

பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்திலிருக் கும் அந்த மாந்தோப்பின் மீது ரொம்ப நாட்களாகவே கேசவனுக்கு ஒருகண் உண்டு.

சரளைப் பாதையில் இருந்து பார்த்தாலே மாங்காய்கள் கொப்புக் கொப்பாகத் தொங்குவது தெரியும். அதிலும் கிளிமூக்கு மாங்காய் என்றால் அவனுக்கு நாவில் எச்சில் ஊறும். உப்புத்தூளும், மிளகாய்த்தூளும் கலந்து மாங்காயில் தொட்டுக் கொண்டு கடித்தால் .... அப்பப்பா... அதன் சுவையே அலாதிதான்.

பள்ளியில் மணிஅடிக்க இன்னும் அரைமணி நேரத்திற்கு மேலிருந்தது. இன்று எப்படியும் கிளிமூக்கு மாங் காயைச் சுவை பார்த்துவிட வேண்டும என்ற முடிவுக்கு வந்தான் கேசவன்.

சுற்றும் முற்றும் பார்த்தான். தோட்டக்காவல்காரர் எங்கோ போயி ருந்தார்.

மாந்தோப்பைச் சுற்றிலும் கம்பி வலை போட்டிருந்தார்கள். கேசவன் கம்பிவலைக்குள் லாவகமாகக் குனிந்து தோப்பிற்குள் சென்றான். அணில்கள் மரத்தைச் சுற்றிக்கொண்டு திரிந்தன.

கேசவன் மாங்காய்களை இப்போது அருகருகே பார்க்கவும் அவனுக்கு எச்சில் ஊறுவது அதிகமானது. புத்த கப்பையை மரத்தடியில் வைத்து விட்டு நல்ல மரமாகப் பார்த்து ஏறினான். சூகை எறும்புகளும், கட்டெறும்புகளும் அதிகமாக மொய்த்தன. அவற்றைத் தட்டிவிட்டு மாமரமேறினான்.

ஒரு கிளையில் பெரிய பெரிய கிளிமூக்கு மாங்காய்கள் கொப்புக் கொப்பாய் தொங்கின.

கேசவன் இரண்டு மாங்காய்களைக கையில் பறித்துக் கீழே போட்டு விட்டுச் சுற்றும்முற்றும் பார்த்தவாறே ஜாக்கிர தையாகக் கீழிறங்கினான்.

கீழே விழுந்து கிடந்த மாங்காய் களை ஒவ்வொன்றாக புத்தகப்பையில் பத்திரப்படுத்தி விட்டுக்கம்பி வலையி னுள் குனிந்து தோப்பிலிருந்து வெளியே வந்தான்.

அப்போது .... எங்கோ வெளியே போயிருந்த தோப்புக் காவல்காரர் அங்கு வந்தார். யாரோ ஒரு பள்ளிச் சிறுவன் மாங்காய் திருடிவிட்டுக் கம்பி வலையிலிருந்து வெளியே வருவ தைப் பார்த்துவிட்டு விரைந்து வந்தார்.

தோட்டக்காவல்காரரைப் பார்த்த கேசவனுக்கு உயிர் பறிபோனதைப் போலாயிற்று. அவரிடம் மாட்டிக் கொண்டால் தன் கதி அதோ கதிதான என்று அருண்டுபோய் பள்ளிக்கு ஓட்டம் பிடித்தான்.

“டேய் .... யாருடா அது... நில் லுடா!” என்று கத்திக்கொண்டே அவ னைத் துரத்தினார். தோட்டக்காவல் காரர்

பள்ளிக்கூடத்தில் அசெம்பிளியில் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடிக் கொண் டிருந்தார்கள்.

“நீராருங் கடலுடுத்த நிலமடந் தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரதக் கண்டமதில்...

விரைந்து வந்த கேசவன் அசெம் பிளியில் கலந்து கொண்டான். அன்று திங்கட்கிழமையாதலால் மாணவர்கள் அனை வரும் வெள்ளைச் சட் டையும் காக்கி நிறத் தில் அரைக்கால் சட் டையும் அணிந்து வந் திருந்தார்கள்.

மாங்காய்த் திரு டனை விரட்டி வந்த காவல்கார ருக்குக் குழப்பமாயிற்று. அனைத்து மாணவர்க ளும் ஒரே விதமான சீருடையில் இருந் தார்கள். இந்தக்கூட்டத்தில் மாங்காய்த் திருடனை எப்படிக்கண்டு பிடிப் பது என்று குழம்பிப் போனார் அவர்.

அசெம்பிளி முடிந்து மாணவர்கள் அவரவர் வகுப் பறைக்குள் சென்று கொண்டிருந் தார்கள். கேசவனும் தப்பித்தோம் பிழைத் தோம் என்று மாண வர்களுடன் வரிசை யில் கலந்து தனது வகுப்பறைக்குச் சென்றான்.

தோட்டக்காவல்காரர் நேராகத் தலைமையா சிரியர் அறைக்குள் சென்றார். தலைமை யாசிரியருடன் அவ ருக்கு ஏற்கனவே நல்ல பழக்கம்.

“சார் வணக்கம் ....” என்றபடி கைகூப்பினார்.

“அடடே ... நம்ம பேச்சிமுத்து .... வா வா ... இப்படி உட்காரு!” என்று இருக்கையைக் காட்டினார்.

தோட்டக்காவல்காரா இருக்கையில் உட்காரத் தயங்கினார்.

“பரவாயில்லை, தயங்காம உட்கா ருப்பா!” என்று தலைமையாசிரியர் வற்புறுத்தியதும் இருக்கையில் அமர்ந்தார்.

“என்ன செய்தி பேச்சி முத்து?” பள்ளிமாணவர்களின் மதிப்பெண் வளர்ச்சிப் பதிவேட்டில் கையெழுத்துப போட்டுக்கொண்டே கேட்டார். தலை மையாசிரியர்.

“சார்...உங்கிட்ட ஒரு புகார் பண்ண வந்திருக்கேன்.”

“என்ன ... புகாரா?” தலைமையா சிரியர் நெற்றியைச் சுருக்கினார்.

“இந்தப் பள்ளிக்கூடத்துப்பையன் ஒருத்தன் இப்ப எங்க மாந்தோப்பில் இருந்து மாங்காய் திருடிட்டு வந்தி ருக்கான்.”

“அவன் யாருன்னு தெரியுமா?”

“தெரியாது சார்.. எல்லாப்பசங் களும் இன்னைக்கு ஒரே சீருடையில் வந்திருப்பதால் என்னால் அவனை அடையாளம் கண்டுபிடிக்க முடியல,”

“ச்சே ... பள்ளிக்கூடத்துல படிச்சுக்கிட்டிருகிற போதே திருட்டா... அதை இப்படியே வளர விடக் கூடாதே...”

“சார் ... தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்னு சொல்வாங்க. இந்தச் சின்ன மாங்காய்த்திருட்டு பிற்காலத்துல அவனை ஒருபெரிய திருடனாக்கூட உருவாக்கலாம் அதனால்...”

“அதனால்?”

“அந்த மாணவனைக் கண்டுபிடிச்சு அவசியம் தண்டிக்கணும் சார்...”

“எப்படி அவனைக் கண்டுபிடிக் கிறது?”

“அந்த மாணவன் அசெம்பிளியில் ஏழாம் வகுப்பு மாணவர் களோட கலந்ததை நான் பார்த்தேன். அதனால அவன் ஏழாம் வகுப்பு மாணவனா கத் தான் இருக்க முடியும்.”

“வெரிகுட், ஒரு நிமிஷம் எங்கூட ஏழாம் வகுப்புக்கு வாங்க... அந்தத் திருட்டு மாணவனைக் கண்டு பிடிச்சிடலாம்” தலைமையாசிரியரின் வருகையால் காவல்காரரின் முகத்தில் நம்பிக்கை தெரிந்தது.

தோட்டக்காவல்கார பேச்சிமுத்து



வும், தலைமையாசிரியரும் அந்த ஏழாம் வகுப்பிற்குள் சென்றார்கள்.

தலைமையாசிரியரின் வருகை கண்டு அந்தவகுப்பு மாணவர்கள் அனைவரும் மரியாதை நிமித்தம் எழுந்து நின்று ஒருமித்த குரலில் வணக்கம் ஐயா என்று சொன்னார் கள்.

“வணக்கம் எல்லாரும் உட்காருங்க ....” என்றார். தலைமையாசிரியா. அவ ருடன் தோட்டகாவல்காரரும் வந்தி ருப்பதைக் கண்ட கேசவனுக்கு வயிற்றில் புளிகரைக்கப்படுவது போலிருந்தது. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது.

“அய்யய்யோ... இன்று நான் வகையாக மாட்டிக்கொண்டேன்” என்று அரண்டு போனான்.

“மாணவர்களே ... இந்த வகுப்பில் ஒரு பையன் இவ்ரோட தோப்புல மாங்காய் திருடிட்டு இங்கே வந்தி ருக்கான். அந்த மாணவன் யாருன்னு கண்டுபிடிக்கணும். உங்க யாருக்காவது அவன். யாருன்னு தெரியுமா?” என்று கேட்டார் தலைமையாசிரியர்.

மாணவர்கள் அனைவரும் ஒரு வரையொருவர் குழப்பத்துடன் பார்த் துக் கொண்டார்கள்.

கேசவன் திருட்டு முழிமுழித்தான் அவன் புத்தகபைக்குள் இரண்டு மாங்காய்கள் இருந்தன.

தோட்டக்காவல்காரர் பேச்சிமுத்து தன் கழுகுக்கண்களால் ஒவ்வொரு மாணவனாக நோட்டம் விட்டுக் கொண்டிருந்தார்.

“மாங்காய் திருடிட்டு வந்த மாண வன் இந்த வகுப்புலதான் இருக் கான்னு. உறுதியாத் தெரிஞ்சு போச்சு. அதனால் உண்மையை ஒத்துக்கிட்டா அவனுக்குத் தண்டனை குறையும். நாங்களா அவன் திருடன்ன கண்டு பிடிச்சா டி.சி.யைக் கிழிச்சு கையில குடுத்து வீட்டுக்கு அனுப்பிடுவோம்.” என்று மிரட்டினார் தலைமையாசிரியா.

அருண்டு போன கேசவன் தன் பைக்குள் இருந்த மாங்காய்களை எடுத்து அருகிலுள்ள ரமேஷ் என்ற மாணவனின் பைக்குள் நைஸாக வைத்துவிட்டு ஒன்றும் தெரியாதது போல இருந்துவிட்டான்.

“டேய் இப்படிச்சொன்னா சரிப்பட்டு வரர்து. ஒவ்வொருத்தன் பையையும் நல்லாப்பாரு. ஏதாவது மாங்காய் ஒளிச்சு வைத்திருக்கலாம்.” என்றார்.

தோட்டக்காவல்காரர் ஒவ்வொரு மாணவனின் பையையும் சோதனை யிட்டார்.

சோதனையின் போது ரமேஷின் பைக்குள் இருந்து மாங்காய்களை எடுத்தார் தோட்டக்காவல்காரர்.

“சார் இதோ இவன் பையிலதான் மாங்காய் இருக்கு.” என்றதும் ரமேஷ் என்ற அந்த அப்பாவி மாணவனுக்குத தூக்கிவாரிப் போட்டது.

“ச.சார்... சத்தியமா எனக்கு ஏதுவும் தெரியாது,” முகத்தில் பீதி படரச் சொன்னான். ரமேஷ்.

“டேய் ... எதுவும் பேசாதடா! என் அறைக்கு வா உனக்கு டி.சி.யைக் கிழிச்சுத்தர்றேன்.” என்று தலைமை யாசிரியர் மிரட்டியதும் ரமேஷ் அழுதே விட்டான். மற்ற மாணவர்கள் அவ னைப் பரிதாபத்துடன் பார்த்தார்கள்.

அப்போது தோட்டக்காவல்காரர் ‘திருதிரு’ வென விழித்துக் கொண்டி ருந்த கேசவனின் சட்டையைப் பிடித் துத் தூக்கினார்.

“சார்... மாங்காய்த்திருடன் அவ னில்ல... இவன்தான்!” என்று தோட் டக்காவல்காரன் சொன்னதும் தலை மையாசிரியருக்குக் குழப்பமாக இருந்தது.

“அவனா?”

“ஆமா சார் ... திருடிட்டு ஓடின பையன் கொஞ்சம் உயரமா இருந்தர்ன். இந்த வகுப்பிலேயே இவன்தான் உயரமானவன். அதுமட்டுமில்லை இவன் சட்டையெல்லாம், மாங்காய்ப் பால்பட்டு கறையா இருக்கு. இது ஒண்ணே போதும் இவன் மரமேறு னதுக்குச் சாட்சி. ஓடின பையன் மஞ் சள்பை வைத்திருந்தான். இவனும் மஞ்சள் பைதான் வைத்திருக்கிறான் பாவம்... அந்தப்பையனோட பையில இவன்தான் திருட்டு மாங்காயைப் போட்டுட்டு அவனை வசமாமாட்டி விட்டிருக்கான்.” என்று அவர் சொன் னதும் கேசவன் தலைகுனிந்தான்.

“டேய்... உண்மையைச் சொல்லு நீதானே மாங்காய் திருடினது?” என்று தலைமையாசிரியர் கேசவனின் காதைப் பிடித்துத்திருகியதும் அவன் உண்மையை ஒத்துக்கொண்டான்.

“டேய்... திருடுறதே ஒருதப்பு. நீ அந்த உண்மையை ஒத்துக்கிட்டி ருந்தா உனக்குத் தண்டனை குறைச் சுத்தான் கிடைச்சிருக்கும்.. ஆனா ஒரு அப்பாவிப்பையனை வேற மாட்டிவிட்டிருக்கே.. உங்கப்பாவைக் கூட்டிட்டு வாடா” என்று அவன் கன் னத்தில் ஓங்கி அறைந்தார். தலை மையாசிரியர்.

கேசவன் அழுதுகொண்டே தன் வீட்டிற்குச் சென்றான்.

**“இளமையிலேயே நல்ல குணங்களை வளர்க்க வேண்டும். தீய குணங்களைத் தவிர்க்க வேண்டும்.”**

# 5 வருடங்களாக போக்குவரத்து வசதியில்லை; சிரமத்துக்குள்ளாகும் துணுக்காய் பகுதி மக்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மக்கள் மீள்குடியேறி 5 வருடங்கள் கழிந்துள்ள போதிலும் இன்றும் போக்குவரத்து நெருக்கடிகளை தாம் எதிர்நோக்குவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேச செயலர் பிரிவில் 20 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ள நிலையில் இக்கிராம மக்கள் தாம் 5 வருடங்களாக போக்குவரத்து பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும் இதனால் தமது அன்றாட செயற்பாடுகள், வாழ்வாதாரம் என்பன பாதிக்கப்படுவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

காட்டுப்பகுதிக்கு நடுவில் இக்கிராமங்கள் அமைந்துள்ளதால் நடந்தும் ஏனைய வாகனங்களில் செல்வதும் ஒரு அச்சத்தை ஏற்படுத்துவதாக உள்ளது என கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக துணுக்காயிலிருந்து அக்கராயன் வழியாக யாழ்ப்பாணம் வரை நடைபெற்ற பேருந்து சேவைகள் கடந்த 4ஆண்டுளாக நடைபெறவில்லை. எனவும் அத்துடன் துணுக்காய் அக்கராயன் புத்துவெட்டுவான் கொக்காவில் ஊடாக கிளிநொச்சி வரையான பேருந்துச் சேவைகளும் ஆண்டுகளாக நடைபெறவில்லை எனவும் இக்கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.


இதனால் ஆலங்குளம், உயிலங்குளம், கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள் குளம், ஐயன்கன்குளம், முறிகண்டி, புத்து வெட்டுவான் கல்விளான் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர் நோக்குவதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக் கப்படுவதாகவும் சுட்டிக்காட் டுகின்றனர். மேலும் இச் சேவைகள் நிறுத்தப்பட்டமைக்கு இக்கிராமங்களின் உள்ளக வீதிகள் மற்றும் பிரதான வீதிகள் சீராக புனரமைக்கப்படாமையே காரணம் எனவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இக்கிராம மக்களின் நலன்கருதி இங்கு போக்குவரத்து சேவைகளை ஏற்படுத்த வேண்டும் என உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த வருடத்திலாவது இக்கிராமங்களுக்கு போக்குவரத்துச் சேவைகளை ஆரம்பித்து மக்களுக்கான போக்குவரத்தை இலகுபடுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(160)

# கலையரங்கம் நிர்மாணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநகர் ராஜாலிங்கம் வீதியில் ஐந்தரை இலட்சம் ரூபா செலவில் கலையரங்கம் ஒன்று நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் நிதி ஒதுக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளதாக முன்னாள் யாழ்.மாநகர சபை துணை முதல்வர் எஸ்.இளங்கோ (றீகன்) தெரிவித்துள்ளார்.

கடந்த 2002ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் மூன்றரை இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த கலையரங்க நிர்மாணப்பணிகள் மேலும் கடந்த 2014 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ஒன்றரை இலட்சம்ரூபா செலவில் முடிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (பா)

# பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கத்தினால் (VaiSWA) ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கப்டன் எஸ்.சிலுவைதாஸ் அவர்களுக்கு சேவைநலன் பாராட்டு விழா நாளை வல்வெட்டித்துறை சந்தியிலுள்ள வல்வை சன சமூக நிலையத்தில் மாலை 04 00 மணியளவில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கப்டன் எஸ்.சிலுவைதாஸ் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மாலுமிகளுக்கு ஆற்றிய சேவைகளுக்கு மதிப்பளிக்கும் முகமாக (VaiSWA)இனால் இச் சேவை நலன் பாராட்டு நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

# "கறுப்பு வெள்ளை படம்" கவிதை நூல் வெளியீடு



(வவுனியா)

வவுனியா கோவில்குளம் இந்துக் கல்லூரிச் சமூகத்தின் அனுசரணையில் மன்னார் பெரியமடு மகாவித்தியாலய ஆசிரியர் ஜெயச்சந்திரன் அபிராம்(கலாரசிகன்) எழுதிய "கறுப்பு வெள்ளை படம்" எனும் கவிதை நூல் கடந்த சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு ஆசிரியர் திருமதி கங்கைவேணி தலைமையில் கோவில்குளம் இந்துக் கல்லூரியின் சரஸ்வதி மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்வின் பிரதம அதிதியாக இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் கே.சிவஞானம், சிறப்பு அதிதிகளாக எழுத்தாளர் கே.கே.அருந்தவராஜா, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் ந.பார்த்தீபன், வவுனியா நகரசபையின் முன்னாள் உபநகர பிதா, க.சந்திரகுலசிங்கம்(மோகன்), வவுனியா வடக்கு கல்வி வலய ஆசிரியர் வள நிலைய முகாமையாளர் ஜெயச்சந்திரன், மன்னார் பெரியமடு மகா வித்தியாலய அதிபர் து.குலதீபன், கலைஞர்கள், நண்பர்கள், கோவில்குளம் இளைஞர் கழக உறுப்பினர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து வெளியீட்டினை சிறப்பித்திருந்தனர்.

(70)

# பதிவிறக்கப் பெட்டகம்

என்னை ஒரு நண்பர் கேட்டார். சிறுகதை, நாவல் எழுதுகிறவன் பெரிய இலக்கிய கர்த்தர்களின் நூல்களைப் படிக்க வேண்டுமா என்று. அவசியமில்லை என்று நான் சொன்னேன். அது எனக்கும் என்னைப் போன்றவர்களுக்கும் சொல்லவில்லை. இயற்கையாகவே அபாரமாக எழுதும் மேதை படைத்தவர்களை, புது வழிவகுக்கும் ஆற்றல் படைத்தவர்களை மனதில் வைத்துக்கொண்டு சொன்னது. என்னைப் போன்றவர் நிறைய படித்தால்தான் நல்லது

**– தி.ஜானகிராமன்**

எல்லோரிடமும் எழுதுவதற்கு ஏராளமாக விஷயங்கள் இருக்கின்றன. எழுத்துலகில் இருக்கும் எத்தனையோ ஜாம்பவான்களை வாசிக்கிற போதெல்லாம், அவர்களைவிட, ஒரு படி மேலே சென்று, பெரிதாக ஒன்றும் செய்துவிட முடியாது என்றும் தோன்றும். அதற்கு தொடர் பயிற்சியும், சிரத்தையும் அவசியம். அதேசமயம், தனிப்பட்ட முறையில், எழுதத் தொடங்கிய பின்பு என்னுடைய பார்வையில் ஏற்பட்ட மாற்றங்களை உணர முடிந்தது. அது வேறு சில அகதரிசனங்களுக்கு வித்திட்டது. எழுத்தாளர்கள் எல்லாம் வித்தைக்காரர்கள்; முடிச்சு போடுபவர்கள், வாசகர்களே தேடுபவர்கள்; புதிர்களை அவிழ்ப்பவர்கள் என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருப்பேன். எழுத்து என்பது ஒரு வித்தை, பொழுதுபோக்கு, மனதுக்கு இனிமை தரும் செயல், என்பது போன்ற கருத்துக்களெல்லாம் மாறி, அது ஒரு வகையான தேடல் என்பதை எழுத ஆரம்பித்த பிறகுதான் புரிந்து கொள்ள முடிந்தது. ஒரு வாசகனாக நான் தேடியதற்கும், எழுத்தின் மூலமாக நான் தேடுவதற்கும் இருந்த வித்தியாசம் புரிந்தது. எனக்கு தீராத மன உளைச்சல் தந்துகொண்டிருந்த ஒரு விஷயத்தை ஒரு எளிய சிறுகதை எழுதியதன் மூலமாக கொன்றழித்து பேரமைதி தேடிக்கொண்டேன் என்றால் நம்புவீர்களா? ஓரிரு பக்கங்களுக்கே இப்படி என்றால் ஆயிரமாயிரம் பக்கங்களை எழுதிக் குவித்துக் கொண்டிருக்கும் வித்தகர்களை என்னவென்று சொல்வது.

வாசிப்பனுபவம் சிற்றின்பம் என்றால், படைப்பனுபவம் பேரின்பம். இவையிரண்டும் இருவேறு பாட்டைகளில் சென்று பெறப்படுபவை அல்ல; ஒரே பாட்டையின் இரு வேறு புள்ளிகள் அவை.

**– மாதவன் இளங்கோ**

இலக்கியம் மனிதனுக்கு அளிக்கப்பட்டதைவிட பெரிய வாழ்க்கையை அவனுக்கு அளிக்கிறது நண்பர்களே. ஒஷோ சொல்கிறார், எந்த அளவுக்கு பரபரப்பானதாக இருந்தாலும் ஒரு மனிதனின் ஒட்டுமொத்த வாழ்க்கை என்பது ஒரு மணி நேரத்தில் சொல்லி முடித்துவிடக்கூடியதே என்று.

அந்தச் சிறிய வாழ்க்கையை இலக்கியம் மூலம் நாம் பெரிதாக்கிக் கொள்கிறோம். ஒரு வாழ்க்கைக்குள் பல வாழ்க்கை வாழ்கிறோம். அந்த வாழ்க்கைகள் மூலம் நம் அனுபவத்தை, நம் விவேகத்தை, நம் சிந்தனையை பெரிதாக்கிக் கொள்கிறோம். இலக்கியம் அதற்காகவே எழுதப்படுகிறது

நண்பர்களே, ஈழ இலக்கியத்தைப் பற்றி நான் சில கருத்துக்களைச் சொல்லிவருகிறேன். எனக்கு வாழ்க்கையை அளியுங்கள் என்பதே என் கோரிக்கை. நான் உங்கள் வாழ்க்கையை உங்கள் சொல் வழியாக அனுபவிக்க வகைசெய்யுங்கள். அதுவே என் நோக்கில் சிறந்த இலக்கியம். சிந்தனைகளை அதில் இருந்து நானே உருவாக்கிக் கொள்வேன்

அதுவல்லாமல் உங்கள் சிந்தனைகளை, உங்கள் அரசியலை, உங்கள் பூசல்களை முன்வைக்கும் இலக்கியத்தை நான் ஏற்க முடியாது. அது எனக்கு ஒன்றும் அளிப்பதில்லை. அது உங்களுக்குள் என்ன பொருள் அளித்தாலும் எனக்கு அதனால் எந்த லாபமும் இல்லை.

மேலான இலக்கியம் நாம் அறிந்த ஒன்றையே நமக்கு அளிக்கிறது. அது எதையும் நிரூபிப்பது இல்லை. நிரூபணம் இல்லமாலேயே நாம் ஒன்றை நம்புவது இலக்கியத்தில் மட்டுமே. ஒரு விஷயம் இலக்கியத்தில் நுட்பமாகச் சொல்லப்பட்டுவிட்டதென்றால் ஆம் இது உண்மை என நம் மனம் உடனே ஒப்புகிறது.

அதுவே இலக்கியத்தின் வலிமை. இலக்கியம் ஆசிரியனால் எழுதப்பட்டிருக்கலாம். அனுபவம் என்னுடையதல்லவா? நானடைந்த அனுபவம் எனக்களிக்கும் ஒரு கருத்து என் கருத்து அல்லவா? அதற்கு எனக்கு ஏன் நிரூபணம்?

**– ஜெயமோகன்**

# பெறுமதியான ஜீப் வண்டி அவிசாவளையில் மீட்பு



அவிசாவளை - என்வில் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மிகவும் பெறுமதியான ஜீப் வண்டி ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மேல்மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த ஜீப் வண்டி பல தினங்களாக குறிப்பிட்ட குடியிருப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனை அடுத்து குறித்த ஜீப் வண்டி மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் குறித்த குடியிருப்பின் உரிமையாளரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, கொழும்பு பேலியகொடை பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரின் வாகனமே திருத்த பணிகளுக்காக இவ்வாறு கொண்டுவரப்பட்டிருந்ததாக குறிப்பிட்டார்.

சம்பவம் தொடர்பில் அவிசாவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுநீரக நோயாளர்களுக்கு மாதாந்தம் 3000 கொடுப்பனவு

(கொழும்பு).

சிறுநீரக நோயாளர்களுக்கு மாதாந்தம் 3000 ரூபா கொடுப்பனவு வழங்கும் திட்டம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நோயாளர்களின் மருத்துவ சிகிச்சைகளுக்கு உதவும் வகையில் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுவதாக சமூக சேவைகள் நலன்புரி அமைச்சர் பீ.ஹரிசன் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பொலனறுவையில் நேற்று நடைபெற்ற வைபவத்தின் போது கொடுப்பனவு வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

கடந்த 13 வருடங்களாக இலங்கையில் சிறுநீரக நோயினால் 20 ஆயிரம் தொடக்கம் 25 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டவிரோத யானைகளை கையளிக்க கால அவகாசம்

சட்டவிரோதமாக யானைகளை வைத்திருக்கும் நபர்கள் அதனை வனஜீவராசிகள் அதிகாரிகளிடம் திருப்பி அளிக்க கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

மல்வத்து மகாநாயக்க தேரரை சந்திக்கச் சென்று ஆசிபெற்ற பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் வசந்த சேனாநாயக்க இது குறித்த அறிவிப்பை விடுத்தார்.



குறித்த காலத்தில் யானைகளை கையளிக்கத் தவறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதி அமைச்சர் கூறியுள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தல் சதி ஏழு பேரிடம் வாக்குமூலம்



ஜனாதிபதித் தேர்தலன்று இரவு வேளையில் முன்னெடுக்கப்படவிருந்ததாக கூறப்படும் சதி தொடர்பில் இதுவரை 7 பேரிடம் வாக்குமூலம் பதிவு செயயப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சட்டமாஅதிபரின் ஆலோசனைக்கு அமைய இவ்வாறு வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கடந்த திங்கட்கிழமை பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணை மேற்கொண்டதாக பொது அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித தேர்தல் தினத்தில் இரவு மேற்கொள்ளப்படவிருந்த சதி தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு கிடைத்த தகவலுக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும அமைச்சர் குறிப்பிட்டார்.

# தமிழ், முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை பெற்றுக் கொடுப்பது அவசியமாகும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

**சிங்கள பௌத்த உரிமைகளைப் பாதுகாத்து நாட்டைப் பாதுகாக்க விரும்பி மாற்றத்தினை மக்கள் ஏற்படுத்தியதைப்போல் தமிழ், முஸ்லிம் சமூகத்தினரின் உரிமைகளை வென்று கொடுப்பதன் மூலமே தற்போது ஏற்பட்டுள்ள மாற்றத்திற்கு உண்மையான அர்த்தம் கிடைக்கும் என தெரிவித்த சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்ன இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றமானது மக்களை திருப்திப்படுத்தும் வகையில் அமைய வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.**

கால மாற்றத்திற்கேற்ப இளைஞர்களின் சக்தியினூடாக ஒரே கூரையின் கீழ் இணைவோம் எனும் தொனிப்பொருளில் நேற்று முன்தினம் இளைஞர் இயக்கத்தினால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

எனது அரசியல் வாழ்க்கையில் போராட்டத்திற்கும் மாற்றத்திறகுமே அதிக.நேரம் செலவழித்துள்ளேன். கடந்த காலங்களில்



பல தலைவர்களுடன் செயற்பட்டிருக்கின்றேன். அதேபோல் இடைப்பட்ட காலங்களில் யுத்தத்திற்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. இவை அனைத்தையும் கடந்து தற்போது மிகப் பெரிய மாற்றம் ஒன்றினை ஏற்படுத்தியுள்ளோம். இந்த மாற்றம் சரியாக அமைய வேண்டுமாயின் தேசிய அரசாங்கத்தின் நூறு நாள் வேலைத்திட்டம் சரியாக செயற்பட வேண்டும்.

அதேபோல் ஆட்சி மாற்றம் ஏற்படுவதனால் மக்கள் திருப்தியடையப்போவதில்லை. மக்களின் பசியை போக்கி அனைத்து மக்களும் சந்தோஷமாக வாழக்கூடிய வகையில் ஆட்சியில் பொருளாதார மாற்றத்தினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதேபோல் இன மத ஒற்றுமையினை பாதுகாத்து ஒன்றிணைந்த ஆட்சியினை மேற்கொள்ள வேண்டும். நாட்டில் சிங்கள பௌத்த உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமானது. ஆனால் அதற்கு சமமான வகையில் தமிழ் முஸ்லிம் கிறிஸ்தவ மக்களின் உரிமைகளுக்கும் முன்னுரிமை வழங்கிச் செயற்பட வேண்டிய தேவை உள்ளது. அத்தோடு நாட்டின் அபிவிருத்தி மேம்பட வேண்டும் நல்ல வர்த்தக, பொருளாதார அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே இப்போது ஏற்பட்டுள்ள மாற்றத்தினை சரியான முறையில் செயற்றிறன் மிக்கதாக மாற்றிக்கொள்ள வேண்டும்.

அத்தோடு க்ட்சி அரசியல் முறைமையில் இருந்து விடுபட்டு மாறுபட்ட அரசியல் முறைமையொன்றினை உருவாக்க வேண்டும். சின்னம் வர்ணம் கொள்கையென தனித்து பயணித்து நாட்டின் அபிவிருத்தியினை கட்டிக் காக்க முடியாது. எனவே இப்போது அனைவருக்கும் மிகச்சிறந்ததொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனை மிகச் சரியாக பயன்படுத்தி மாற்றத்தினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேலும் எந்தவொரு மாற்றத்திற்கும் அடிப்படை இளைஞர்களே. இளைஞர் சமூகம் ஒன்றிணைவதுதான் ஒரு நாட்டின் பிரதான மாற்றத்திற்கு அடிப்படையாக அமையும்' என அவர் மேலும் தெரிவித்தார்.

# பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக கொப்பிகள்

(கொழும்பு)

இலவசக் கல்வியை மேலும் அர்த்தமுள்ளதாக்கும் வகையில் பாடசாலை மாணவர்களுக்கு இலவச அப்பியாசக் கொப்பிகளை வழங்குவதற்கு க்ல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

புதிய கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் இதற்கான பணிப்புரையை கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கு தமது 100 நாள் வேலைத்திட்டத்தில் நடை முறைப் படுத்துமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

முதற் கட்டமாக ஐந்தாம் தரம் வரையான மாணவர்களுக்கே இலவச அப்பியாசக் கொப்பிகளை வழங்க அவர் பணித்துள்ளார்.




ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வியை மேலும் அர்த்தமுள்ளதாக்கும் விதத்தில் இலவச மதிய உணவு, இலவச பாடநூல், இலவச சீருடை என்பன மாணவர்களுக்கு வழங்கப்பட்டன

தற்போது பின்தங்கிய பிரதேச மாணவர்களுக்கு ஒரு சோடி காலணிகள் வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

# காணாமற் போனோர் குறித்து விசாரணை ஜனாதிபதியை சந்தித்தது ஆணைக்குழு

(கொழும்பு)

காணாமற் போனவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து ஆணைக்குழவின் எதிர்கால செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடினார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஆணைக்குழுவின் தலைவர் ஜனாதிபதித் தேர்தல் போன்றவற்றினால் தடைப் படாமல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதுடன் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.


கடந்த 2013ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15ஆம் திகதி குறித்த ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் இன்றுவரை 19,671 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதில் 5000 முறைப்பாடுகள் பாதுகாப்புப் படையின் உறவினர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றவை என்றும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில கவனம் செலுத்திவரும் அதேநேரம் புதிய முறைப்பாடுகளும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் தினம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ள நிலையில் மேலும் 6 மாதங்களுகக்கு நீடிக்கப்பட்டுள்ளன.


முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் கடந்த ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி இவ் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இக்குழு கடந்த 1990 ஆம் ஆண்டு ஜுன் 10 ஆம் திகதி தொடக்கம் 2009 மே 19ஆம் திகதி வரையில் கடத்தப்பட்டவர்கள் மற்றும் காணாமற் போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை நடாத்தி வருகிறது.


இவ் ஆணைக்குழுவில் சட்டத்தரணி பரணகம- தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் பிரியந்தி சுரஞ்ஜனா வித்தியாரத்ன மற்றும் இலங்கை நிதிச்சபையின் முன்னாள் அங்கத்தவர் மனோகரி ராமநாதன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(25)




(I) 20
(II) 25
(III) 30

(26)



(I) 7
(II) 8
(III) 9


(27)



(I) 23
(II) 24
(III) 27


(28)



(I) 21
(II) 31
(III) 41


கீழே தரப்பட்ட படத்தின் நிறத் திட்டப்பட்டது என்ன பங்கு எனக் கண்டு பிடித்துக் கோடிடுக

(29)


(I) $\frac{1}{7}$ (II) $\frac{1}{8}$ (III) $\frac{1}{5}$

(30)


(I) $\frac{1}{7}$ (II) $\frac{5}{7}$ (III) $\frac{5}{16}$

(31)


(I) $\frac{1}{2}$ (II) $\frac{3}{8}$ (III) $\frac{5}{8}$

### நேற்று பிரசுரமாகிய பயிற்சி வினாக்களின் விடைகள்

(01).1. 2  2. 2  3. 2  4. 1  5. 3  6. 2  7. 2  8. 1  9. 1  10.1
11.1  12. 3  13. 1  14. 2  15. 3  16. 1  17. 2  18.1  19. சரி  20.பிழை
21. பிழை  (02). 1.வாழை  2.மா,அன்னாசி  3.20  4.மாதுளை  (03).1.மரியாள் வித்தியாலயம்
2.136  3.9  4.றஜீனாவித்தியாலயம்  (04).1.6  2.7  3.9  4.12  (05).1.8மணி
2.152  3.74  4.28ருபா  5.97  6.14  7.308  8.1468  9. ☒  10.14  11.ஐம்பத்தாறு
12.14  13.55  14.3  (06).1.35  2.51  3.76  (07).1.18  2.24  3.27  4.28  (08).1.20
2.44  3.90



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1.30 மணி

# கல்வி முரசு




(1) ஆரம்ப அமைப்பை பெற அனைத்தையும் கொண்ட உரு எது?




(i) (ii) (iii)


(2) கீழே ஆரம்பத்தில் தரப்பட்ட அமைப்பில் எதிர்ப்பக்கங்களின் அதே இலக்கம் உள்ளது. இதற்கேற்ப பிரித்தால் கிடைக்கும் அமைப்பு யாது?




ஆரம்பத்தில் தரப்பட்ட அமைப்பை ஒன்றின் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் அமைப்பு யாது?


(3)


(i) (ii) (iii)


(4)


(i) (ii) (iii)

கீழே தரப்பட்ட செயன்முறையை அவதானித்து அடுத்துவரக் கூடியது எதுவெனக் கண்டு கீறிடுக


(5)



(i) (ii) (iii)


(6)



(i) (ii) (iii)

தரப்பட்ட தராசின் நிறையை அவதானித்து விடை தருக




(07) வினாக்குறி வந்துள்ள இடத்துக்கு வரும் விடை யாது?








(08) கீழே தரப்பட்ட படஒழுங்கை அவதானித்து அடுத்து வரும் உரு எதுவெனக் கண்டு கீறிடுக



(i) (ii) (iii)


கீழே A தொடக்கம் 1வரையான போக்கு வரத்து பாதை தரப்பட்டுள்ளது. அதற்கேற்ப விடை தருக




(09) A இல் இருந்து D,E இன் ஊடாக H,G வரையிலான தூரம் யாது?

.............................................................


(10) வித்தியாசமான படத்தின் கீழ் கோடிடுக



(i) (ii) (iii) (iv)


வெற்றுக் கூட்டினுள் வரும்விடையைக் கண்டு கீறிடுக

(11)



(i) (ii) (iii)

(12)



(i) (ii) (iii)

கீழே தரப்பட்ட கணிதச்செய்கையை அவதானித்து விடை தருக

□ x □ = 81 , △ - 19 = □ x □ , △ + ◇ = 150 எனின்



(13) △ இன் பெறுமானம் என்ன? (I) 50 (II) 75 (III) 100

(14) ◇ இன் பெறுமானம் என்ன? (I) 40 (II) 50 (III) 60

(15) மேலே தரப்பட்ட தகவலுக்கு ஏற்ப சமனுக்கு இருபுறமும் ஒரே பெறுமானமுடைய விடை தருக

(i) △ = ◇ x ◇ (ii) △ = ◇ + ◇ (ii) △ = ◇ - □

(16) □ + △ + ◇ இன் பெறுமானம் யாது? (I) 89 (II) 119 (III) 159

கீழே தரப்பட்ட அடையாளங்கள் உள்ள எந்த விடையை இலக்கங்களுக்கு இடையே இடுவதன் மூலம் இருபுறமும் ஒரே விடையைப் பெறலாம்

(17) 7 7 7 7 7 = 7


(I) +,-, ÷, + (II) x,÷,+,x (III) x,÷,-,+

(18) 8 8 8 8 8 = 8

(I) +,+,÷,+ (II) -,+,-,+ (III) x,+,x,+


வினாக்குறி வந்துள்ள இடத்துக்கு வரும் விடையை கண்டுபிடித்து கீறிடுக

(19)





(I) 4
(II) 9
(III) 7

(20)




(I) 18
(II) 24
(III) 10

(21)





(I) 30 (II) 40 (III) 50


(22) (5) → (3) → △4 (10) → (4) → △12 (15) → (7) → △?

(I) 18 (II) 20 (III) 16

வினாக்குறி வந்துள்ள இடத்துக்கு வரும் படம் எது எனக் கண்டு கீறிடுக

(23)





(i) (ii) (iii)

புள்ளிக்கோட்டில் வரும் விடை எதுவெனக் கண்டு கீறிடுக

(24)




(I) 30
(II) 35
(III) 36



காரைநகர் களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குளி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (50)

# 13 ஆவது திருத்தச்சட்டம் அமுல் இணக்கம் எதுவும் ஏற்படவில்லை

## ஜாதிக் ஹெல உறுமய தெரிவிப்பு



13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது குறித்து கட்சிகளுக்கு இடையில் இன்னமும் இணக்கப்பாடு எதுவும் ஏற்படுத்திக் கொள்ளப்படவில்லை என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 100 நாள் திட்டத்திற்கு மட்டுமே ஜாதிக ஹெல உறுமய கட்சி ஒத்துழைப்பு வழங்கும் என கட்சியின் பேச்சாளர் நிசாந்த சிறிவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் 13 ஆம் திருத்தச் சட்டம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது குறித்து எவ்வித பேச்சுகளும் கட்சிகளுக்கு இடையில் நடத்தப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த அரசியல் கட்சிகளுக்கு இடையில் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதாக பிரதமர் அண்மையில் கருத்து வெளியிட்டதாக ஊடகங்களில் வெளியாகியிருந்த செய்தி குறித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# பயங்கரவாதம் தலைதூக்காதிருக்க பொன்சேகா சொல்லும் ஆலோசனை

(கொழும்பு)

அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் சரியாக கையாளப்படாவிடின் பயங்கரவாதம் மீண்டும் ஆரம்பமாக முடியும் என முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான ஜெனரல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஆங்கிலப் பத்திரிக்கை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக தொடர்ந்து கருத்துத் தெரிவித்துள்ள அவர், வெளிநாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் .இப்போதும் உள்ளனர். அதேபோல வடக்கு, கிழக்கிலும் ஒரு சில அரசியல்வாதிகள் இருக்கலாம். அதை பூரணமாக மறுக்க முடியாது.

சில மாதங்களுக்கு முன்னர் சில தமிழீழ விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டனர். முன்னிருந்த அரசாங்கத்தின் அக்கறையின்மையே இவ்வாறானதொரு நிலைமை ஏற்படக் காரணம். அவர்கள் தேடுதல் முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

இதன்மூலம் தப்பியிருந்த புலி உறுப்பினர்களைப் பிடித்திருக்கலாம். முன்னைய அரசாங்கம், கே.பி, கருணா அம்மான், பிள்ளையான், எமில் காந்தன் ஆகிய புலித்தலைவர்களுக்கு செல்லம் கொடுத்திருந்தது. இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் தவறியது.

மேலைத்தேய நாடுகளிலும் தமிழ் நாட்டிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இப்போதும் உள்ளனர். இதுபோல வடக்கு, கிழக்கிலும் ஒரு சில அரசியல்வாதிகள் இருக்கலாம். அதை பூரணமாக மறுக்க முடியாது.

இந்த நிலைமையில் அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும சரியாக கையாளப்படாவிடின் பயங்கரவாதம் அதன் கொடூரத்தை மீண்டும் தொடங்க முடியும். எனவே, அரசியல் தலைவர்களின் செயற்பாட்டிலேயே இந்த கேள்விக்கு பதிலுண்டு என அவர் மேலும் தெரிவித்தார்

# தேர்தல் வன்முறைகளுடன் தொடர்பு எதிராக கடும் சட்டநடவடிக்கை

## ஜனாதிபதி உறுதியளிப்பு

தேர்தல் வன்முறைகளுடன் தொடர்புடைய அனைவருக்கும் எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஹிங்குரக்கொடயில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனைக் கூறினார். எந்தவொரு அரசாங்கமும் வழங்காத நிவாரணத்தை இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் வழங்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது குறிப்பிட்டார்.

தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்ட எவருக்கும் மன்னிப்பு வழங்கப்பட மாட்டாது. சட்டத்தை உரிய வகையில் நடைமுறைப்படுத்துவேன். நாட்டில் இவ்வாறு இடம்பெற அனுமதிக்க முடியாது.

நாடு அபிவிருத்தி அடைவது என்பது வீதிகளும் கட்டடங்களும் நிர்மாணிக்கப்படுவதல்ல. பௌதீக வளங்கள் அபிவிருத்தி அடையும் போது அதற்கு ஏற்றவாறு மக்களின் ஆன்மிகமும் வளர்ச்சியடைய வேண்டும். மக்களின் மனங்கள் மேம்பட வேண்டும்.

ஆகவே புதிய பயணத்தை ஆரம்பித்துள்ளோம். இது எளிதான விடயமல்ல நான் துட்டகைமுனுவோ தேவநம்பிய திஸ்ஸனோ அல்ல. நான் மன்னனும் அல்ல. நான் மகா விஜயபாகு மன்னனோ மகா பராக்கிரமபாகு மன்னனோ அல்ல. நான் உண்மையாகவே ஜனநாயக நாட்டின் சாதாரண மக்கள் சேவகன் என்பதைத் தெளிவாகக் கூறுகின்றேன்.

## மக்கள் மீது துப்பாக்கிச்சூடு

# பிரிகேடியர் குணவர்த்தனவை திருப்பி அழைக்க ஏற்பாடு

வெலிவேரிய, ரதுபஸ்வெலவில் சுத்தமான குடிநீருக்காக போராட்டம் நடாத்திய பொது மக்கள் மீது, துப்பாக்கிச் சூடு நடாத்த உத்தரவிட்ட- தற்போது வெளிநாட்டில் இராஜதந்திரப் பதவி வகித்து வரும் பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தனவை, திருப்பி அழைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

2013 ஆம் ஆண்டு ஒகஸ்ட் முதலாம் நாள் ரதுபஸ்வெலவில் சுத்த்மான குடிநீருக்காக போராட்டம் நடத்திய பொது மக்கள் மீது படையினர் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 இளைஞர்கள் கொல்லப்பட்டதுடன் 26 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்துக்கு நீதி வேண்டியும், துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டவர்களை கைது செய்யக் கோரியும், ரதுபஸ்வெல மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

அங்கு சென்ற பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம் ஒழுங்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க, சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்துள்ளார். பொது மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடாத்த உத்தரவிட்ட பிரிகேடியருக்கு, முன்னைய அரசாங்கம் வெளிநாட்டில் இராஜதந்திரப் பதவியைக் கொடுத்து அனுப்பியிருந்தது என்பதை அறிவேன். அவர் திருப்ப அழைக்கப்படுவார் என்றும் அமைச்சர் ஜோன் அமரதுங்க உறுதியளித்துள்ளார்.

# 1000 பேருக்கு திருட்டுத்தனமாக இரட்டைக் குடியுரிமை வழங்கல்

## வெளி விவகார பிரதி அமைச்சர் தெரிவிப்பு

இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடைமுறையை இலங்கை அரசாங்கம் இன்னும் முறையாக மீளத் தொடங்காதுள்ள சூழ்நிலையில், ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு சட்டவிரோதமாக இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக புதிய துணை வெளியுறவு அமைச்சர் அஜித் பி. பெரேரா பி.பி.சி.யிடம் கூறியுள்ளார்.

"முன்னாள் ஜனாதிபதியின் உறவினர்கள், நண்பர்கள், தோல்வியடைந்த அரசியல்வாதிகள் உள்ளிட்ட தனிப்பட்ட உறவுகளின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட அனைத்து தூதுவர்களும் உயர்ஸ்தானிகர்களுமாக 29 பேரை நாங்கள் அந்தப் பதவிகளிலிருந்து திருப்பியழைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தூதுவர்களை திருப்பியழைத்து அந்தப் பதவிகளுக்கு புதியவர்கள் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அரசியல் ரீதியில் நியமிக்கப்பட்ட இரண்டாம், மூன்றாம் நிலைகளில் இருப்போரையும் திருப்பியழைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவதற்கு மீண்டும் நடவடிக்கை எடுத்துள்ளதாக மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் இறுதிக் கட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் 2011 இற்குப் பின்னர் இரட்டைக் குடியுரிமை வழங்கலுக்கு நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஆனால், ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் திருட்டு வழியில் இரட்டைக் குடியுரிமை பெற்றிருக்கின்றார்கள். இதுதொடர்பில் நாடாளுமன்றத்தின் பொது கணக்குகள் குழுவில் நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

புதிய அரசாங்கம் கொள்கை ரீதியில் இரட்டைக் குடியுரிமை வழங்கலை ஏற்றுக் கொள்வதாகவும், இரட்டைக் குடியுரிமை விநியோக நடவடிக்கைகளை விரைவில் தொடங்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வாழ்க வளமுடன்

உங்களது மழலைச் செல்வங்கள் 10 வயதுக்கு உட்பட்ட 'வராயின் அவர்களின் பிறந்த நாளை வெளியிட தினமுரசு பத்திரிகைய்யில் வெளிவரும் கீழ்க்காணும் கூப்பனை நிரப்பி புகைப்படத்தையும் அனுப்பி வையுங்கள்.


சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

..............................

பெற்றோர் கையொப்பம்





# இந்தியாவின் 66ஆவது குடியரசு தினம்

# சிறப்பு விருந்தினராக ஒபாமா



(புதுடில்லி)

இந்தியாவின் 66ஆவது குடியரசு தின விழா நேற்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது. குடியரசு தினவிழாவில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். டில்லி இந்தியா கேட்டில் உள்ள அமர் ஜவான் ஜோதியில் (உயிர் நீத்த வீரர்களின் நினைவிடம் பிரதமர் நரேந்திர மோடி அஞ்சலி செலுத்தினார். போர் நினைவுச்சினத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

டில்லி ராஜ்பாத் சாலையில் குடியரசு தினவிழா நேற்றுக்காலை தொடங்கியது. விழாவில் கலந்து கொள்ள வந்த அமெரிக்க அதிபர் ஒபாமாவை பிரதமர் மோடி வரவேற்றார். முப்படைத் தளபதிகளையும் பிரதமர் மோடி ஒபாமாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

விழா நடக்கும் இடத்திற்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி அழைத்துச் செல்லப்பட்டார். அவரை துணை ஜனாதிபதி அன்சாரி, பிரதமர் மோடி, அமைச்சர்கள் வரவேற்றனர். பின்னர் தேசிய கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதம் ஒலிக்கப்பட்டது. பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் ஒபாமா, பிரணாப் உள்ளிட்டோர் தேசிய கொடிக்கு மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து முப்படைகளின் அணிவகுப்பு மரியாதை மாநிலங்களில் கலை கலாசாரத்தை பிரதிபலிக்கும் பவனிகளும் வியக்க வைக்கும் அளவிற்கு இடம்பெற்றன.

## அசாமில் குண்டு வெடிப்பு


இந்தியாவின் 66ஆவது குடியரசு தினவிழா நேற்று நடை பெற்ற நிலையில் அசாம் மாநிலத்தில் டின்சுக்யா மாவட்டத்தில் டிக்போயி நகரில் தொடர்ச்சியாக 2 குண்டுகள் வெடித்தன.

முதலில் ரயில் தண்டவாளம் அருகே உள்ள குப்பைக் கிடங்கில் புதைத்து வைத்திருந்த குண்டு வெடித்தது. சிறிது நேரம் கழித்து குப்பைக் கிடங்கின் அடியில் உள்ள சாக்கடையில் குண்டு வெடித்தது. இந்த 2 குண்டுகளும் குறைந்த சக்தித் திறன் கொண்டவையாக இருந்தன. மேலும் இவை நாட்டு வெடிகுண்டுகளாகும். எனவே, இவை பெரிய அளவில் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

## சக்திவாய்ந்த குண்டுவெடிப்பு பாக்தாத்தில் 8 பேர் பலி

(பாக்தாத்)



தொடர் வன்முறை மற்றும் குண்டு வெடிப்புகளால் சிதைந்து வரும் ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நேற்று இரு இடங்களில் சக்தி வாய்ந்த வெடி குண்டுத் தாக்குதல் நிகழ்ந்துள்ளது.

பாக்தாத்தில் உள்ள அல்-ஷர்ஜி பகுதியில் உள்ள சிறிய உணவகத்திற்கு வெளியே நடைபெற்ற வெடி குண்டுத் தாக்குதலில் 5 பேர் பலியாகினர். 11 பேர் காயமுற்றனர்.நகரின் மையப் பகுதியான சிபாவில் நடந்த மற்றொரு குண்டு வெடிப்பில் 3 பேர் பலியாகினர். 11 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த இரு தாக்குதல் சம்பவங்களுக்கு இதுவரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

உலகச் செய்திகள்

## ரஷ்யா மீது பொருளாதாரத் தடை; உணவுத்தட்டுப்பாட்டால் மக்கள் அவதி

(மாஸ்கோ)

உக்ரைன் விவகாரத்தால் ரஷ்யா மீது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடை விதித்துள்ளன. உணவுப் பொருட்களின் ஏற்றுமதியையும் நிறுத்தி வைத்துள்ளன. இதனால் ரஷ்யாவில் பொருளாதார பிரச்சினையும் அதன் எதிரொலியாக கடும் உணவுத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. இதனால் உணவுப் பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளது.

இதுகுறித்து ரஷ்ய எம்.பி.க்களும், பழமைவாதிகளும் பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளனர். அதில் அதிபர் விளாடிமிர் புதினுக்காகவும், ரஷ்யாவின் நலனுக்காகவும் மக்கள் குறைவாக உணவு சாப்பிடுங்கள்.

மேற்கத்திய நாடுகளின் உண்வு வகைகளை விடுத்து நிறைய பீற்ரூட் சாப்பிடுங்கள், ரஷ்யாவில் தயாரிக்கப்படும் பருத்தி துணிகளை அணியுங்கள். குறைந்த அளவு மின்சாரத்தை குறைவாக பயன்படுத்துங்கள் இது நமக்கு கடவுள் கொடுத்த சோதனையாக கருதுங்கள் என தெரிவித்துள்ளனர்.ஆனால் மக்கள் அதை முழுமையாக ஏற்கவில்லை. புடின் அரசு மீது கோபமாக உள்ளனர்.

## மிஸ் யுனிவர்ஸ் அழகியாக கொலம்பிய மாணவி தெரிவு



(நியூயோர்க்)

2015ஆம் ஆண்டுக்கான மிஸ் யுனிவர்ஸ் (பிரபஞ்ச அழகி) போட்டி அமெரிக்காவில் உள்ள மியாமி நகரில் நடைபெற்றது. அதில் இந்தியா, அமெரிக்கா, கொலம்பியா. உக்ரைன் உள்ளிட்ட 88 நாடு களைச் சேர்ந்த அழகிகள் கலந்து கொண்டனர்.


உடை அலங்காரம், அறிவுத்திறன், உடல் அழகு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றது நேற்றுமுன்தினம் இறுதிப் போட்டி நடைபெற்றது.

அதில் கொலம்பியாவைச் சேர்ந்த பவுலினா வேகா மிஸ் யுனிவர்ஸ் பட்டம் வென்றார். அவருக்கு கடந்த ஆண்டு பட்டம் வென்ற வெனிசுலா அழகி காபிரியலா இஸ்லர் கிரீடம் அணிவித்தார்.

அவருக்கு அடுத்த படியாக அமெரிக்காவைச் சேர்ந்த நியா சான்செஸ், உக்ரைனை சேர்ந்த டயானா ஹர்குஷா ஆகியோர் 2ஆவது இடங்களைப் பிடித்தனர்.மிஸ் யுனிவர்ஸ் பட்டம் வென்ற கொலம்பியா அழகி பவுலினா வேகாவுக்கு 22 வயது ஆகிறது. இவர் கொலம்பியாவில் பாரன் குயிலா நகரைச் சேர்ந்தவர்.

கல்லூரி மாணவி ஆன இவர் வர்த்தக நிர்வாகம் படித்து வருகிறார்.

## பாக். இராணுவத்தளபதி சீன அதிகாரிகளுடன் பேச்சு




பாகிஸ்தான் இராணுவத் தளபதி ராஹீல் செரீப், சீன இராணுவத்தின் உயர்அதிகாரிகளை சந்தித்து பேசியுள்ளார்.


நீண்டகால இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு, உளவுத் துறை, தகவல் பரிமாற்றம் மற்றும் பயங்கரவாத-எதிர்ப்பு ஒத்துழைப்பு ஆகியவைக்கு இருநாடுகள் இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது. அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா வலுவான நட்புறவுக் காரணமாக இந்தியாவிற்கு இரண்டாவது முறையாக வருகைதந்துள்ள நிலையில் பாகிஸ் தான் இராணுவத் தளபதி சீனா சென்றுள்ளார். பாகிஸ்தான் அரசு தீவிரவாதம் தொடர்பான விவகாரங்களில் இந்தியா மற்றும் அமெரிக்காவின் கடும் நெருக்கடியின் கீழ் உள்ளது. பெரும் நெருக்கடியை அடுத்து மும்பை தீவிரவாத தாக்கு தலுக்கு முளையாக செயற்பட்ட ஹபீஸ் சயீத்தின், ஜமாத் உத்தாவா இயக்கத்தை தீவிரவாத பட்டியலில் இணைத்துள்ளது. அந்த இயக்கத்தின் சொத்துக்களும் முடக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தான் இராணுவத் தளபதி ராஹீல் செரீப், இரண்டு நாள் பயணமாக சீனா சென்றுள்ளார். சீனா இராணுவ தலைமையகத்தில் அந்நாட்டு இராணுவ அதிகாரி குய் ஜியாங்குவோவுடன் இணைந்து இராணுவ மரியாதையை ஏற்றுக் கொண்டார். பின்னர் அங்கு இருநாட்டு அதிகாரிகள் இடையிலான பேச்சுவார்த்தை நடைபெற்றது. பிராந்திய பாதுகாப்பு, பாதுகாப்பு தொடர்பான விவகாரங்கள் முழு வீச்சில் இருநாட்டு அதிகாரிகள் சார்பில் ஆலோசிக்கப்பட்டது என்று பாகிஸ்தான் இராணுவ செய்தித் தொடர்பாளர் அசிம் பாஜ்வா டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

# பழிவாங்கும் வக்கிரம் இருக்கும்வரை உரிமைகள் கிடைப்பது எப்படி

## ஒருங்கிணைப்பாளர் ஜெகன் கேள்வி





தேசிய அரசியலில் நீண்ட காலமாக தமிழரது உரிமைப்பிரச்சினைகள் ஒரு விளையாட்டு மைதானமாகத்தான் பார்க்கப்படுகின்றது. இதற்கு அனைத்து வகையிலும் கைகொடுத்து வருபவர்கள் வெற்றுத் தேசியம் பேசிவரும் கூட்டமைப்பினர்தான்.

இவர்களது உறுதியற்ற எதிர்ப்பு அரசியலையும் சோரம் போகும் குணத்தையும் நன்கு பயன்படுத்திய தென்னிலங்கை அரசியல் தலைமைகள் தமிழ் மக்களுக்கான அதிக உரிமைகளை தமது அதிகாரங்களைக் கொண்டு பறித்தெடுத்துவிட்டனர். தற்போதைய புதிய அரசியல் மேடையில்கூட அத்தகைய நிலைதான் உருவாகியுள்ளது.

ஆனால் கிடைத்துள்ள இந்த சந்தர்ப்பத்தை கூட்டமைப்பினர் மிகச்சரியாக பயன்படுத்த வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளருமாகிய கே.வி.குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்துள்ளார்.

நல்லூர் தொகுதி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற *சமகால அரசியலில் ஈ.பி.டி.பி.யின் செயற்பாடுகள் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை பிரதேச அமைப்பாளர் ரவீந்திரதாசன் தலைமையில் நடைபெற்றது.

இதில் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பொதுச்சபை உறுப்பினர்கள், கல்விமான்கள், அரச அதிகாரிகள், பொதுமக்கள் என 200 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய ஒருங்கிணைப்பாளர்,

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரது செயற்பாடுகள் என்றுமே சுயநலன் சார்ந்ததாக இருந்தது கிடையாது. எமது அரசியல் பாதையில் நாம் மேற்கொண்ட அனைத்து சேவைகளும் மக்கள் சார்ந்ததாகவே இருந்துள்ளது. அதனால்தான் 1994 இல் இருந்து எமது கட்சி மத்தியில் ஆட்சி செய்பவர்களுடன் இணக்க அரசியலை மேற்கொண்டு மக்களுக்காக சேவை செய்து வாழ்ந்து வருகின்றது.

தேசிய அரசியலில் மாற்றம் வந்தமை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வீழ்ச்சி என எண்ணுபவர்களுக்கு கூறுகின்றேன். நாங்கள் என்றும் வீழ்ந்து போகின்றவர்கள் கிடையாது. அக்கினிப் பறவைகளாய் மீண்டுவந்து மக்களுக்காக உழைப்பவர்கள். எந்த சூழ்நிலையிலும் மக்களை விட்டு ஓடியொழிந்து சுகபோகங்களை பெற்று வாழவும் மாட்டோம்.

கடந்த காலத்தில் பழிவாங்கும் அரசியல் நிகழ்வுகள் பல திட்டமிட்டு நடந்தேறின. கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளில் மாற்றங்களும் தற்போதைய ஜனாதிபதியால் கொண்டு வரப்பட்டுள்ளது. திட்டமிட்ட வகையில் சட்டத்தின் உதவியுடன் எமது வடக்கு, கிழக்கு இணைந்த பகுதி பிரிக்கப்பட்டது. தற்போது புதிய அரசின் 100 நாள் திட்டம் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கின்றது.

அரசுடன் ஒட்டியிருக்கும் தமிழ்க் கூட்டமைப்பு தமது கோரிக்கையாக வடக்கு, கிழக்கு இணைப்பை ஏன் முன்வைக்காது மௌனமாக இருக்கின்றார்கள். தமிழ் மக்களது உரிமைகளில் சிரத்தை உடையவர்களாக அவர்கள் இருப்பின் நிச்சயமாக அத்தகைய கோரிக்கையை அவர்கள் முன்னிறுத்துவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

புதிய அரசில் பங்கு கொண்டதன் மூலம் கூட்டமைப்பினரும் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கைக்கொண்டுவந்த தற்கால அரசியல் நீரோட்டத்திற்கேற்ப இணக்க அரசியலுக்குள் காலடி எடுத்துவைத்துள்ளனர். இதுதான் தற்போது நடைமுறைக்கு சாத்தியமான வழியுமாகும். இந்த இணக்கம் தொடர்ந்து செல்லுமானால் தமிழ் மக்களது உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கான காலம் நெருங்கிவிடும். அத்தகைய செயற்பாடுகளுக்கு எமது கட்சியும் முழுமையான ஆதரவை கொடுகத் தயாராகவுள்ளது. கூட்டமைப்பினர் இனியொருதடவை கடந்த கால அரசியல் நகர்வுகளை மேற் கொள்ள விரும்பமாட்டார்கள் என எதிர்பார்க்கின்றோம். கடந்து வந்த தமிழர் அரசியல் வரலாறு இதன்மூலம் மாற்றமடையும் என்றும் நம்புகின்றோம்.

நடந்து முடிந்த தேர்தல் குடாநாட்டு ஊடகங்களுக்கு எப்படியும் எழுதலாம் என்ற களத்தை உருவாக்கிக்கொடுத்துள்ளது. மக்களுக்கு உண்மையை எடுத்துக்கூறி மக்களை விழிப்படையச் செய்யவேண்டும் என்ற எண்ணங்கள் அவர்களிடம் ஒரு துளிகூடக் காணப்படுவதில்லை. எல்லாம் வியாபார நோக்கமாகவே நடைபெற்று வருகின்றன.

மனச்சாட்சியுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் நன்கு தெரியும் குடாநாட்டில் காணப்படுகின்ற அபிவிருத்திகளை யார் செய்து கொடுத்தது என்று. ஆனால் அவற்றையெல்லாம் மழுங்கடித்து மக்களுக்கு தவறான கதைகள் கூறி மக்களை ஏமாற்றுபவர்களை நினைக்கத்தான் வேதனையாக உள்ளது.

1987 இல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு 13 வாது சட்டத்திருத்தத்தின் மூலம் தீர்வை பெற இணங்கிக்கொண்ட முதலாவது போராட்ட அமைப்பு செயலாளர்நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிதான் என்பதையும் இன்று சந்தர்ப்பவாத அரசியலில் செய்யும் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

அரசியல் சதுரங்கத்தில் பலம்பொருந்தியவர்கள் பக்கம் அதிகாரங்கள் சாய்வது இயற்கையானது தான். ஆனால் தொடர்ந்தும் அத்தகைய நிலை நீடித்திருக்கும் என்று நினைப்பது தான் தவறாகும். காய்க்கும் மரங்கள் தான் கல்லெறி வேண்டுவதுண்டு நாங்கள் காய்க்கும் மரங்கள். அதனால்தான் எம்மீது கல்லெறியப்படுகின்றது என்று தெரிவித்துள்ளார்.

# முறைதவறிய வியாபாரம்; தண்டம் விதித்தது நீதிமன்றம்

குளிர்பானத்துடன் வழங்கப்படும் இலவச இணைப்பு பொருளை கொள்வனவாளர்களுக்கு வழங்காத வர்த்தக நிலைய உரிமையாளர்கள் இருவருக்கு, தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் தீர்ப்பளித்ததாக யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை பொறுப்பதிகாரி தனசேகரம் வசந்தசேகரம் நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

பாவனையாளர் அலுவல் அதிகார சபை அதிகாரிகள் உரும்பிராய்ப் பகுதியில் மேற்கொண்ட சோதனையில், குளிர்பானப் போத்தல்களுடன் இலவச இணைப்பாக இணைத்து வந்த பழரசப் போத்தல்களை கொள்வனவாளர்களுக்கு வழங்காத இரண்டு வியாபார நிலைய உரிமையாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

அவர்களுக்கு எதிராக கடந்த 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 30 ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு, நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வர்த்தகர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டனர். இதனையடுத்து நீதவான் மேற்கண்ட உத்தரவை பிறப்பித்தார்.

## பாதுகாப்பு...

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக ருவான் விஜேவர்தன பதவியை பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் அமெரிக்க தூதரக அதிகாரி ஒருவர் சந்திக்கும் முதல் சந்தர்ப்பம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரமாக பணியாற்றுங்கள்; ஊடகவியலாளர்களுக்கு அழைப்பு

எந்தவித பயமுமின்றி சுதந்திரமாக சேவையாற்றுங்கள் என அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் புதிய ஊடக அமைச்சர் கஜந்த கருணாதிலக அழைப்பு விடுத்துள்ளார்.

குறிப்பாக பல அச்சுறுத்தல்களாலும் அழுத்தங்களாலும் நாட்டை விட்டு வெளியேறிய அனைத்து ஊடகவியலாளர்களும் எவ்வித பயமுமின்றி நமது நாட்டில் வேலை செய்ய முடியுமெனவும் அவர்களை திரும்ப நாட்டுக்கு வருமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன் ஊடகவியலாளர்களுக்கு ஏற்ற பாதுகாப்பான சூழலை தற்போதைய புதிய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. அத்துடன் பழைய காலங்களில் நடந்ததைப் போன்று வன்முறைச் சம்பவங்கள் ஏதும் இனிவரும் காலங்களில் இடம்பெறாது எனவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை ஸ்ரீ தலதா மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தலதா மாளிகையில் வழிபாடுகளில் கலந்து கொண்ட அமைச்சர் திபத்துவவே ஸ்ரீசுமங்கல தேரர் மற்றும் உடுகம ஸ்ரீபுத்தரக்கித தேரர் ஆகியோரை சந்தித்து வணங்கி ஆசியும் பெற்றார்.

## இலங்கை...

பொருளாதார ரீதியாகவும் உறவு உள்ளது.

அத்துடன் இரண்டு நாடுகளுக்கு இடையிலும் அரசியல் தெளிவும் உள்ளது. இந்த நிலையில் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நியாயமான முறையில் முன்னெடுக்கப்பட்டமையை சின்ஹா வரவேற்றுப் பேசினார்.

போருக்குப் பின்னர் யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவைகள் உட்பட்ட, வீடுகள் அமைப்பு திட்டங்களையும் இந்தியா செய்து கொடுத்துள்ளது.

இந்தநிலையில் எதிர்காலத்திலும் இரண்டு நாடுகளுக்கு இடையிலும் உறவுகள் தொடரும் என்று சின்ஹா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## திருக்கேதீஸ்...

அதிபர் சார்பாக அவரது பிரதிநிதி நேற்று சமுகமளித்திருந்தார். அவர் குறித்த புதைகுழிக்கு அண்மையில் கிணறு எதுவும் காணப்படவில்லை என்று அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

எனினும், நாம் கிணறு இருந்தமை தொடர்பாக நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தோம். இதற்கமைவாக விரிவான அறிக்கைகளை சமர்ப்பிக்க நீதிமன்றம் கோரியுள்ளது என்றார்.

## பிராந்திய...

அரசாங்கத்தை ஆதரித்து தமிழ் மக்களை வாக்களிக்குமாறு கூறியவர்கள் தற்போது அதே அரசாங்கத்தையே எதிர்த்து தமது சுயலாப அரசியலை முன்னெடுக்க ஆயத்தமாகியுள்ளனர்.

தற்போதைய அரசோடும் கூட்டமைப்பினருக்கு தமிழ் மக்களின் கோரிக்கைகளை முன் வைத்து தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியாதுபோனால், தீர்வுக்கான விருப்பம் கூட்டமைப்பினரிடம் இல்லை என்ற உண்மை விரைவில் அம்பலமாகும். நாடாளுமன்றத் தேர்தலுக்கு கூட்டமைப்பு தயாராகிவிட்டது. ஜனாதிபதித் தேர்தலின் போது புதிய அரசோடு காணப்பட்ட இணக்கங்களும், கொடுக்கல் வாங்கல்களுமான தேனிலவு முடிவுக்கு வரத் தொடங்கியுள்ளது.

தென்னிலங்கையில் அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளது. வட இலங்கையிலும் கூட்டமைப்பு தமிழ் மக்களிடையே நடத்திவரும் ஏகபோக சுயலாப அரசியலும் மாற்றமடைய வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும். அந்த மாற்றத்தை ஏற்படுத்த உறுதியெடுப்பதே தமிழ் மக்கள் முழுமையான மாற்றத்தை அனுபவிக்க வழிபிறக்கும் என்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தெரிவித்துக் கொள்கின்றது.

## மன்னாரில்...

பிரஜைகள் குழு அலுவலகத்தில் ஆரம்பமாகியது. இந்த அமைதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் கறுப்பு துணிகளால் தமது முகத்தை மூடிக் கட்டியவாறு, மன்னார் தனியார் பேருந்து நிலையம் வழியாக மன்னார் மாவட்டச் செயலகம் வரை சென்று, அங்கு வீதியோரமாக கவனயீர்ப்பு போராட்டம் நடத்தினர்.

பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மூன்று அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தியே இந்த அமைதி ஊர்வலம் நடைபெற்றது.

மன்னார் திருக்கேதீஸ்வரம் புதைகுழி வழக்கை துரிதப்படுத்தி குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தவேண்டும், சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும், காணாமற்போன மற்றும் கடத்தப்பட்டவர்களை கண்டு பிடித்துத் தரவேண்டும். ஆகிய கோரிக்கைகளே முன்வைக்கப்பட்டன.

இவ் ஊர்வலத்தில் மன்னார் பிரஜைகள் குழுவின் உப தலைவர் அ.சகாயம், மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகள், தன்னார்வத் தெண்டு நிறுவன ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். திருக்கேதீஸ்வரம் புதைகுழி வழக்கு விசாரணை மன்னார் நீதிமன்றத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## அரசியல்...

இராயப்பு ஜோசப் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்படி உறுதி மொழியை மன்னார் ஆயரிடம் வழங்கினார். ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர் மகஸின் சிறைச்சாலைக்குச் சென்ற மன்னார் ஆயர் அங்கு 120 தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்து உரையாடினார்.

பின்னர் வெலிக்கடை சிறைக்குச் சென்று அங்குள்ள 5 பெண் அரசியல் கைதிகளையும் சந்தித்து உரையாடினார். அரசின் 100 நாள் வேலைத் திட்டத்துக்குள் கைதிகள் விடுதலை செய்யப்படுவது சாத்தியமாகாது. எனினும் இந்த வருட முடிவுக்குள் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்வதற்கான உரிய நடவடிக்கைகளை ஜனாதிபதி மைத்திரிபால மேற்கொள்வார் என்று மன்னார் ஆயரிடம் தெரிவித்தார் என மேலும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# வேலையற்ற பட்டதாரிகள் கிழக்கில் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்திலும் வேலையற்ற பட்டதாரிகள் தங்களுக்கு அரச துறையில் வேலை வழங்கக் கோரி இன்று திங்கட்கிழமை வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசாங்கத்தின் நூறு நாட்கள் வேலைத்திட்டத்தில் தங்களின் இந்த கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோரிக்கையும் வேலையற்ற பட்டதாரிகளினால் இந்த ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நகரிலுள்ள காந்தி சதுக்கம் முன்பாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த நூற்றுக்கணக்கான வேலையற்ற பட்டதாரிகள் கலந்து கொண்டு தங்களைது கோரிக்கையை வலியுறுத்தும் வகையில் கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் உருவப் படங்களையும் அவர்களது கைகளில் காண முடிந்தது.

2011- 2014 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பட்டம் பெற்ற இந்தப் பட்டதாரிகளில் ஒரு தொகுதியினர் கடந்த அரசாங்கத்தின் பதவிக் காலத்தில் 2012 இற்கு முன்பு பட்டம் பெற்றவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பில் தொழில் வாய்ப்பை பெற முடியாமல் போனவர்கள் எனக் கூறப்படுகின்றது.

பல்கலைக்கழக நிர்வாகங்கள் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் ஏற்பட்ட தாமதங்களே தங்களுக்கு இந்த நிலை ஏற்படக் காரணம் என அவர்கள் கூறுகின்றனர்.

ஆர்ப்பாட்ட முடிவில் மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினால் கையளிக்கப்பட்ட கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களினால் கோரிக்கை மனு தொடர்பாக மத்திய அரசின் பொது நிர்வாக அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வருவதாக உறுதி மொழியும் வழங்கப்பட்டது.

# கீர்த்தி சமரசிங்கவுக்கும் நாட்டை விட்டு வெளியேறத் தடை

ஜனாதிபதி செயலகத்தின் போக்குவரத்துப் பிரிவு பணிப்பாளர் நாட்டை விட்டு வெளியேறிச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டே நீதவான் திலின கமகே இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

ஜனாதிபதி செயலக போக்குவரத்துப் பிரிவின் பணிப்பாளராக கீர்த்தி சமரசிங்க திஸாநாயக்க பணியாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான 246 வாகனங்கள் இன்னமும் மீள ஒப்படைக்கப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான ஓர் பின்னணியில் அதன் பணிப்பாளர் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கக் கூடாது என கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினர் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான 53 வாகனங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பயிர் சிகிச்சை முகாம் கிளிநொச்சியில் மும்முரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் நன்மை கருதி, விவசாய போதனாசிரியர் பிரிவுகளின் ஊடாக பயிர் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா, தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், கிளிநொச்சி மாவட்டம் ஒரு விவசாய மாவட்டமாக இருப்பதனால், விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் மாவட்ட விவசாய விரிவாக்கல் அலுவலகத்தால் சகல போதனாசிரியர் பிரிவுகளிலும் பல்வேறு விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் பயிர் செய்கைகளில் காணப்படுகின்ற நோய்த்தாக் கங்கள், அவற்றுக்கான சிகிச்சை முறைகள் தொடர்பாகவும் முகாம்கள் நடத்தப்பட்டு, அவற்றின் மூலம் விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்களும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

விவசாயப் போதனாசிரியர்களிடமும், மாவட்ட விவசாயத் திணைக்களத்திடமும் இவ்வாறான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் கூறினார்.

# நான் தோல்வி கண்டிருந்தால் கொலை செய்யப்பட்டிருப்பேன்

தேர்தலில் நான் தோற்றிருந்தால் என்னை கொலை செய்திருப்பார்கள். அது மட்டுமல்லாது எனது உயிருக்கு ஆபத்து இருந்ததாலேயே அரசாங்கத்தை விட்டு வெளியேறினேன் - இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. பொலநறுவையில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே இதனைக் குறிப்பிட்ட ஜனாதிபதி, தேர்தலில் தோற்றிருந்தால் தான் ஆறடி நிலத்திற்குள் புதையுண்டிருப்பார் என்றும் கூறினார்.

அக்கூட்டத்தில் மேலும் அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு, தேர்தலில் நான் தோற்றால் என்னைச் சித்திரவதை செய்வதற்கும் எனது பிள்ளைகளைக் கைது செய்வதற்கும் முன்னாள் அரசாங்கம் திட்டமிட்டது. தேர்தலுக்குப் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையை ஏற்ப தைத் தவிர எனக்கு வேறு வழியிருக்கவில்லை. தலைமையை ஏற்றிருக்காவிட்டால் நாடு உடனடியாக தேர்தலை சந்தித்திருக்கும். தேர்தல் நடைபெற்றிருந்தால் 100 நாள் திட்டம் பாதிக்கப்பட்டிருக்கும் என்றும் அவர் கூறினார்.

# வெளிநாடு செல்லத் தடை

முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவின் கடவுச்சீட்டு முடக்கப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு வழங்கிய பணிப்பின் பேரில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மகிந்தானந்த அளுத்கமகே மீது இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இந்தியக் குடியரசு தினத்தினை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இந்திய துணைத் தூத்ரகம் நடத்திய நிகழ்வின்போது.... (உ.ந)

# விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் உயிரிழப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலியில் கடந்த சனியன்று இடம் பெற்ற விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த பத்தமேனி அச்சுவேலியைச் சேர்ந்த அருந்தவராசா மனோராஜ் (வயது-22) நேற்று உயிரிழந்துள்ளார்.

இதேவேளை படுகாயமடைந்த பத்த மேனி அச்சுவேலியைச் சேர்ந்த சத்திநேசன் தர்சன் (வயது-21) சிசிச்சை பெற்று வருகிறார்.

கடந்த சனியன்று மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களும் சிற்றூர்தியுடன் மோதி விபத்துக்குள்ளான நிலையில் பிரஸ்தாப உயிரிழந்த இளைஞன் அச்சுவேலி வைத்தியசாலையில் இருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் யாழ். போதனாவிற்கு மீண்டும் மாற்றப்பட்ட நிலையில் இளைஞர் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் குறித்து மரண விசாரணை அதகாரி பிரேம்குமார் மரண விசாரணையை மேற்கொண்டதுடன் அச்சுவேலிப் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தங்கச்சி தியாகராஜா (பூமாதேவி)

சங்கானை ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும், சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தங்கச்சி தியாகராஜா அவர்கள் 24.01.2015 ஆம் சனிக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் இராசரத்தினம் சிவபாக்கியம் அவர்களின் அன்பு மகளும், சுப்பிரமணியம் தியாகராஜவின் (பத்திரிகை விற்பனையாளர், சித்தங்கேணி, ஓய்வுபெற்ற இ.போ.ச. உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், சுசிலாதேவி (கனடா), சுமதி (ஜேர்மனி), ஜெயரூபி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரசூரியர், பத்மநாதன், தயாநிதி, சிவனருள், சுஜீவாகரன், கஜதீபன் ஆகியோரின் அன்பு மாமியாரும்,

அமரர் நாகராசா, தியாகராசா (சிறி பிரான்ஸ்), இராசுகுமார் (அப்பப்பு-கனடா), தனேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரத்தினவல்லி,ஜெயராசா (கனடா) அமரர் சர்வசூலராசா, மகேந்திரராஜா, சுந்தர்ராஜா, சிவராஜா (கொலண்ட்) ஆகியோர் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக சங்கரத்தை வழுக்கையாறு இந்து மயாணத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்திருகின் றேன்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அன்னவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : கணவர் சுப்பிரமணியம், தியாகராஜா (சித்தன்கேணி), தொலைபேசி இல. 02122500**

(இ)

## மரண அறிவித்தல்

### சிவபாக்கியம் செல்லத்துரை

யாழ்.மீசாலை ஐயா கடையடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் செல்லத்துரை 25.01.2015 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா அம்மாகுட்டி தம்பதிகளின் அன்பு மகளும், வல்லிபுரம் முத்துப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும், செல்லத்துரை (முன்னாள் கிளை முகாமையாளர், க.வடக்கு ப.நோ.கூ.சங்கம் பன்றிசுட்டான்) அவர்களின் அன்பு மனைவியும், செல்வமலர் (இந்தியா), புஸ்பமலர் (மீசாலை), உமாமலர் (இத்தாலி), மணிவண்ணன் (சுவிஸ்) திருமால்மருகன் (சுவிஸ்) சுந்தரமலர் (பிரான்ஸ்), சுரபாஸ் கரன் (அமரர்) துவாரகன் (பிரான்ஸ்) துசேரகரன் (கட்டார்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணபதிப்பிள்ளை கணேசலிங்கம், இராசேந்திரம், இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற .சிவநாதரன் பாலராசா அமிர்தலிங்கம் சிவராசா ஜெயசுகி (சுவிஸ்), ஜெயந்தினி, விவேகானந்தன் (பிரான்ஸ்) பபித்ா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், இராஜசேரன், ஜெயராணி, தயாளன், நிசாந்தன், செல்வரூபா, ஜெயரஞ்சித் (B.sc), அருண்ராஜ் (Be.C.Sc) இந்தியா) சுதாகரன், சுகிர்தா, கோவிநாத், ரமேஸ் (கட்டார்), றமித்தா, ஜெயயோகிந், ஜெசிந்தா, மயூரி (சுவிஸ்), மைதிலி, அவிஸ், மதுஜன் (சுவிஸ்), சங்கீர்த்தனா, நிவேதா, சுவேதா (பிரான்ஸ்)ஆகியோரின் பாசமிகு பேத்தியும் சிறிசொய்சரன், ஆகாஷ், அபிநயா சிகாயனி (இந்தியா), சானியா (இந்தியா) அபிஷாயினி, கரணிகா, அக்ஷஜ, சுஜித் (பிரான்ஸ்) ஜெனித், விதுசினி, அபிஸ்கா, கிறிஸ், தனுஸ்க, அஸ்வின் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.01.2015) மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் சாவகச்சேரி கண்ணாடிபிட்டி இந்து மயானத்தில் அன்னாரின் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**0772822738** (இ) **தகவல் : குடும்பத்தினர்.**


## விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

**இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366.**

(C/3775)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஜனவரி 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.